# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மத நல்லிணக்க விழா

விழுப்புரம், ஜன. 6: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மத நல்லிணக்க விழா நடந்தது. கல்லூரி மாணவிகள் பேரவையின் தலைவி அப்ராசிமென் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் அருணகுமாரி நோக்கவுரையாற்றினார். துணை பதிவாளர் சவுந்தர்ராஜன் மத நல்லிணக்கம் பற்றிய கருத்துக்களை எடுத்துரைத்தார். பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகரன், புத்தரின் கருத்துக்களையும் குழந்தை பருவத்திலேயே ஒற்றுமை உணர்வினை வளர்க்க வேண்டும் எனும் கருத்துக்களையும் மாணவர்களிடத்தில் எடுத்துரைத்தார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மத நல்லிணக்க விழா நடந்தது.

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தின் தத்துவவியல் துறை பேராசிரியர் நல்லசிவம், மாணவிகளுக்கு, அவரவர் மதத்தில் சொல்லப்பட்ட வாழ்வியல் நெறிகளை முதலில் அறிந்துக்கொள்ள வேண்டும் என்பதையும் மதங்களில் உயர்வு தாழ்வு இல்லை எனும் கருத்துக்களையும் திருக்குறள், திருமந்திரம், பெரியபுராணம், திருவாசகம், பைபிள், குறான், கம்பராமாயணம், மகாபாரதம், பாரதிப் பாடல்கள், ஔவையார் பாடல்கள் போன்ற இலக்கியங்களிலிருந்து மத நல்லிணக்கம் குறித்த செய்திகளை விளக்கினார்.

ஆங்கிலத் துறை முதலாம் ஆண்டு மாணவி சனோபர் நிஷா மத நல்லிணக்கம் என்ற தலைப்பில் தனது கருத்துக்களை எடுத்துரைத்தார். கல்லூரி மாணவிகளின் கலைநிகழ்ச்சி நடந்தது. மாணவிகள் பேரவை துணைத்தலைவி. சத்யா நன்றி கூறினார்.

தினகரன்
06.01.2018
சனி

# மாணவர்களுக்கான ஆலோசனை கூட்டம்



▶ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது.

விழுப்புரம், ஜன. 20: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது. இஎஸ்எஸ்கே கல்வி குழும கல்வி அலுவலர் அருள்நங்கை வரவேற்றார். இஎஸ்எஸ்கே கல்வி குழும பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகரன் தனது நோக்க உரையில், மாணவர்கள் தங்களை சமூகத்தில் நிலைநிறுத்திக்கொள்ள மேற்படிப்பை தொடரும் போதும், வேலைவாய்ப்புக்கு செல்லும் போதும் ஏற்படும் இன்னல்களை எதிர்கொள்ளும் வகையில் உளவியல் ரீதியாக ஆலோசனைகள் தேவைப்படுகிறது. தொழில்நுட்பங்கள் மூலமாக மாணவர்கள் நல்ல உறவை ஏற்படுத்திக்கொள்ளவும், மன அமைதியுடன் கருத்துக்களை தெளிவாக வெளிப்படுத்துவதற்கும் இத்தகைய ஆலோசனைகள் மாணவர்களுக்கு உந்துதலாக அமையும் என்றார்.

அமெரிக்காவை சேர்ந்த சிந்தியா டெட்மென் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில், மாணவர்கள் வகுப்பறையில் கலந்துரையாடலில் ஈடுபட்டால் மட்டுமே சமுதாயத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றார். இதனை தொடர்ந்து மாணவர்களிடையே கலந்துரையாடல் நடந்தது.

இஎஸ்எஸ்கே கல்வி குழும கல்வி அலுவலர் அருள்நங்கை நன்றி கூறினார்.

தினகரன் 20.01.2018

# மகளிர் கல்லூரியில் ஆலோசனை கூட்டம்

**விழுப்புரம், ஜன. 24–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், மாணவர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது.

நிகழ்ச்சிக்கு, இ.எஸ்., கல்விக்குழும பதிவாளர் கஸ்துாரிபாய் தனசேகரன் தலைமை தாங்கி, மாணவர்கள் தங்களை சமூகத்தில் நிலைநிறுத்தி கொள்ளுதல் பற்றியும், மேற்படிப்பு மேற்கொள்ளும் போது வேலைவாய்ப்பிற்கு செல்லும் தருணத்தில் ஏற்படும் இன்னல்களும், அதற்கான ஆலோசனைகள் பற்றி கூறினார். கல்வி அலுவலர் அருள் நங்கை வரவேற்றார்.

சிந்தியா டெட்மென், மாணவர்கள் வகுப்பறையில் கலந்துரையாடலில் ஈடுபட்டால், சமூகத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்றும், இதன் மூலம் சமூகத்தின் சூழலை எதிர்க்கும் பார்வையை வளர்த்து கொள்ளவும், நம்பிக்கையை வளர்த்து சமூகத்தில் தன்னை நிலைநிறுத்தி கொள்வது பற்றியும் விளக்கினார். இதில், பல்வேறு துறைகளை சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தினமலர்
24/01/2018



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இ.எஸ்., கல்வி குழும பதிவாளர் கஸ்துாரிபாய் தனசேகரன் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

தினகரன் 24.01.2018

# தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரி கணினிதுறை தலைவருக்கு பாராட்டு



குடியரசு தின சாதனையாளர் விருது பெற்ற தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியின் கணினித் துறை தலைவர் மணிமேகலையை கல்லூரி நிர்வாகம் பாராட்டியது.

**விழுப்புரம், ஜன. 24:** உலகெங்கிலும் உள்ள கணினி விஞ்ஞான நுண்ணறிவு ஆராய்ச்சி குழுக்கள், ஒருங்கிணைந்து கணினி துறையில் சிறந்து விளங்கிய ஆராய்ச்சியாளர்களை தேர்ந்தெடுக்கும் பணியினை மேற்கொண்டனர். கடந்த 18ம்தேதி சென்னை லயோலா கல்லூரியில் நடந்த விழாவில் சிறப்பு விருந்தினராக ஐபிஎஸ் கூடுதல் இயக்குனர் முனைவர் சைலேந்திரபாபு கலந்துகொண்டு, அத்தகைய சிறப்பு வாய்ந்த குடியரசு தின சாதனையாளர் விருது தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் கணினித்துறை தலைவர் மணிமேகலை சிறந்த ஆராய்ச்சியாளர் என்ற விருதினை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய அரிய விருதினை பெற்றமைக்கு அவரை கல்லூரி நிர்வாகம் பாராட்டி சிறப்பித்தது.

## தெய்வானை மகளிர் கல்லூரி மாணவிகள்

# சிங்கப்பூர் கல்வி சுற்றுப்பயணம்




▶ சிங்கப்பூர் கல்வி சுற்றுப்பயணம் மேற்கொண்ட தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகளை நிர்வாகத்தினர் பாராட்டினர்.

விழுப்புரம், பிப். 2: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி பன்னாட்டுக் கல்வி கற்றல் திறத்தை ஊக்குவிக்கும் வகையில் கல்லூரியின் உயர்நோக்கங்களில் ஒன்றான சர்வதேச கல்வி சுற்றுப்பயணத்தை மாணவிகளுக்கு ஏற்பாடு செய்தது. 2018 ஜனவரி 22 முதல் 25 வரை நடைபெற்ற இக்கல்வி சுற்றுப்பயணத்தில் பேராசிரியர் ஒருவருடன் சேர்ந்து முதலாம் ஆண்டு பயிலும் 5 மாணவிகள் சிங்கப்பூர் கல்வி சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டனர்.

இப்பயணத்தில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம், நன்யாங் கல்வி நிறுவனம், கர்டின் சிங்கப்பூர் மற்றும் லேசல் கலை கல்லூரி, சிங்கப்பூர் மேலாண்மை பல்கலைக் கழகம், சிங்கப்பூர் தேசிய நூலகம் போன்ற பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாணவிகள் சென்று தங்கள் கல்வித்திறனை மேம்படுத்திக்கொண்டனர். பல்கலைக்கழகத்தை தவிர்த்து சிங்கப்பூர் நகர சுற்றுப்பயணத்தை மாணவிகள் பார்வையிட்டனர். மாணவிகளின் இக்கல்வி சுற்றுப்பயணம் கல்லூரிக்கு பெருமை சேர்க்கும் வகையிலும், மாணவிகளின் இம்முயற்சி கல்லூரிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகவும் கருதப்படுகிறது. இக்கல்லூரி மேலும் தொடர்ந்து மாணவிகள் சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு சென்று கல்வித்திறனை மேம்படுத்திக்கொள்ள உதவுகிறது. இக்கல்விப்பயணம் மாணவிகளின் கல்வித்திறனை மேம்படுத்திக்கொள்ள வழி காட்டுவதோடு கல்லூரி வளர்ச்சிக்கும் வழிவகுத்துள்ளது.

2/2/18




சிங்கப்பூருக்கு கல்வி சுற்றுலா சென்று வந்த

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு பாராட்டு

விழுப்புரம், பிப்.2–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி சார்பில் பன்னாட்டு கல்வி கற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மாணவிகளை கல்வி சுற்றுலா அழைத்து சென்று வருகிறார்கள். அதன்படி இந்த கல்வி ஆண்டில் முதலாம் ஆண்டு பயிலும் தேவதர்ஷினி, பிந்தியா, சவுந்தர்யா, மோனிகா, ஷாலினி ஆகிய 5 மாணவிகள், பேராசிரியர் அருள் நங்கை தலைமையில் சிங்கப்பூருக்கு 4 நாள் கல்வி சுற்றுலா சென்றனர். அவர்கள் சிங்கப்பூர் தேசிய பல்கலைகழகம், நன்யாங் கல்வி நிறுவனம், கர்டின் சிங்கப்பூர் மற்றும் லேசல் கலைக்கல்லூரி, சிங்கப்பூர் மேலாண்மை பல்கலைக்கழகம், சிங்கப்பூர் தேசிய நூலகம் போன்ற இடங்களுக்கு சென்று தங்களது கல்வி திறனை மேம்படுத்தி கொண்டனர். இதையடுத்து கல்வி சுற்றுலாவை முடித்துக் கொண்டு கல்லூரிக்கு திரும்பிய மாணவிகளை அக்கல்லூரியின் செயலாளர் செந்தில்குமார், கல்லூரி பதிவாளர் டாக்டர் கஸ்தூரிபாய் தனசேகரன் ஆகியோர் வரவேற்று பாராட்டினர்.

தினத்தந்தி 2/2/18

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# தேசிய கருத்தரங்கம்




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இயற்பியல் துறை சார்பில் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது.

விழுப்புரம், பிப். 6: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இயற்பியல் துறை சார்பில் ரீசென்ட் டிரெண்ட் இன் மெட்டீரியல் சயின்ஸ் என்ற தலைப்பில் ஒரு நாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. இயற்பியல் துறை தலைவர் பாரத் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் அருணாகுமாரி, கருத்தரங்கு நோக்கத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். இஎஸ்எஸ்கே கல்விக்குழுமத்தின் பதிவாளர் முனைவர் கஸ்தூரிபாய் தனசேகரன் சிறப்புரையாற்றினார். கல்லூரி செயலர் செந்தில்குமார் தலைமையுரையாற்றினார். இஎஸ்எஸ்கே கல்விக்குழுமத்தின் துணைப்பதிவாளர் சவுந்தரராஜன் மற்றும் கல்லூரியின் ஆராய்ச்சி வளர்ச்சிப்பிரிவின் ஒருங்கிணைப்பாளர் உத்ரா ஆகியோர் நோக்கவுரையாற்றினர். சிறப்பு விருந்தினராக புதுடெல்லி தேசிய இயற்பியல் ஆய்வகத்தின் மூத்த விஞ்ஞானி விஜயன் கலந்து கொண்டார்.

இக்கருத்தரங்கில் 18 கல்லூரியிலிருந்து 88 மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 219 தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு தங்கள் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்து உரையாற்றினர். சிறந்த ஆய்வுக்கட்டுரைகளுக்கான பரிசினை புதுச்சேரி சாரதா கங்காதரன் கல்லூரி மற்றும் கடலூர் பெரியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் பெற்றனர். உதவி பேராசிரியர் சுரேஷ் நன்றி கூறினார்.

தினகரன்
6/2/18

தினமணி 07/02/18

# மகளிர் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்

விழுப்புரம், பிப்.6: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி இயற்பியல் துறை சார்பில், தொழில்நுட்ப முன்னேற்றம் தொடர்பான தேசியக் கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில், இயற்பியல் துறைத் தலைவர் டி.பாரத் வரவேற்றார். கல்லூரி முதல்வர் அருணாகுமாரி நோக்க உரையாற்றினார். இ.எஸ். கல்விக் குழும பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகரன், கல்லூரிச் செயலர் எஸ். செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். துணைப் பதிவாளர் இ.செளந்தர்ராஜன், ஒருங்கிணைப்பாளர் சி.ஆர்.உத்ரா ஆகியோர் கருத்தரங்க விளக்க உரையாற்றினர்.

புதுதில்லி தேசிய இயற்பியல் ஆய்வகத்தின் முதுநிலை விஞ்ஞானி என். விஜயன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, சிறப்புரையாற்றினார். இயற்பியல் துறையின் முன்னேற்றம், படிக வளர்ச்சி மற்றும் படிகத்தின் பண்புகள், அதன் பயன்பாடுகள் குறித்து அவர் விரிவாக விளக்கினார். மேலும், இயற்பியல் துறையின் கொள்கையைப் பயன்படுத்தி இயற்கை மாசுபடுதலை தடுப்பது, அதன் வழிமுறைகள் குறித்தும் விளக்கினார்.

கருத்தரங்கில், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 18 கல்லூரிகளிலிருந்து 88 மாணவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டு, தங்களின் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

இதில், சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்த புதுவை சாரதா கங்காதரன் கல்லூரி, கடலூர் பெரியார் அரசு கலை, அறிவியல் கல்லூரி மாணவர்கள் முதல் பரிசை வென்றனர். உதவிப் பேராசிரியர் ஜி.சுரேஷ் நன்றி கூறினார்.



கருத்தரங்கில் பங்கேற்ற புதுதில்லி தேசிய இயற்பியல் ஆய்வக முதுநிலை விஞ்ஞானி என்.விஜயனுக்கு நினைவுப் பரிசு வழங்கிய கல்லூரி நிர்வாகிகள்.



தினத்தந்தி 25/01/18

## தெய்வானை அம்மாள் கல்லூரியில்

# பேராசிரியர்களுக்கான பயிலரங்கம்

விழுப்புரம்,ஜன.25–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பேராசிரியர்களுக்கான பயிலரங்கம் நடைபெற்றது. இதற்கு கல்லூரி முதல்வரும், இ. எஸ்.எஸ்.கே. கல்வி குழும பதிவாளருமான டாக்டர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமை தாங்கினார். கல்விக் குழும கல்வி அலுவலர் அருள்நங்கை வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக அமெரிக்காவை சேர்ந்த சிந்தியா டெட்மென் கலந்து கொண்டு பேசுகையில், பேராசிரியர்கள் வகுப்பறையில் மாணவிகளுடன் கலந்துரையாட வேண்டும். கற்பித்தல் முறை, செய்முறை தேர்வு, சிந்தனையை தூண்டுதல், நாடகமாக நடித்தல், விளையாட்டு முறை, வினா விடை முறை கற்பித்தல், கள ஆய்வு ஆகிய முறைகளை மாணவிகள் பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். இதில் இ.எஸ்.எஸ்.கே. கல்வி குழும பதிவாளர் கல்லூரி முதல்வர் அருணாகுமாரி, நர்சிங் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். முடிவில் துணை பதிவாளர் சவுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

விழுப்புரம் வந்த

# நிவேதிதை ரத யாத்திரைக்கு வரவேற்பு



விழுப்புரம், பிப்.12–

சுவாமி விவேகானந்தரின் முதன்மை சீடர் நிவேதிதையின் 150–வது பிறந்த நாளை முன்னிட்டு நிவேதிதை 150 என்கிற ரத் யாத்திரை கோவையில் தொடங்கி தமிழகம் முழுவதும் கொண்டு செல்லப்பட்டு வருகிறது. அந்த வகையில் விழுப் புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி வளாகத்துக்கு வந்த நிவேதிதை ரத யாத்திரைக்கு இ.எஸ். கல்விக்குழுமம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. இதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கல்லூரி செயலாளர் செந்தில் குமார் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் அருணாகுமாரி வரவேற்றார். இ.எஸ். கல்விக்குழும தலைவர் சாமிக்கண்ணு, கல்லூரி பதிவாளர் டாக்டர் கஸ்தூரிபாய் தனசேகரன், ராமகிருஷ்ணா மெட்ரிக் பள்ளி செயலாளர் பழனி வேலு ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். சிறப்பு அழைப்பாளராக தேவானந்தாராஜ் சுவாமி கலந்து கொண்டு நிவேதிதை வரலாறு, பெண் கல்வி மேம்படுத்துவதன் நோக்கம் குறித்து சிறப்புரையாற்றினார்.

முன்னதாக நிவேதிதை 150–வது பிறந்த நாளை முன்னிட்டு மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகள் ஷனோபர்நிஷா, பிரியங்கா ஆகியோருக்கு பரிசு வழங்கப்பட்டது. முடிவில் இ எஸ்.எஸ்.கே. கல்விக்குழும துணை பதிவாளர் சவுந்தர்ராஜன் நன்றி கூறினார்.

தினத்தந்தி 12.2.18

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# இலக்கிய விமர்சன கருத்தரங்கம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் பங்கேற்ற மாணவிகள். உள்படம்: முனைவர் மேரி கேப்ரியல் காணொலி மூலம் இலக்கிய விமர்சனம் பற்றி விளக்கினார்.

விழுப்புரம், பிப். 8: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆங்கிலத்துறை சார்பில் காணொலி மூலம் ஆங்கில இலக்கிய விமர்சன கருத்தரங்கம் நடந்தது. இதில் வேலூர் ஆக்சிலியம் கல்லூரி முனைவர் மேரி கேப்ரியல் காணொலி மூலம் மாணவிகளுக்கு வாசித்தல், கலந்துரையாடல், மதிப்பிடுதல், விமர்சித்தல் குறித்து விளக்கினார். மேலும் இலக்கியத்தை விமர்சிக்க பயன்படும் இரண்டு கருவிகளான கண் வேர் ஜென்ட், டைவேர்ஜெண்ட் பற்றியும் கூறினார். இதில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் 450க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

தினகரன் 08.02.2018

தினகரன்
7/3/18

# மாணவிகளுக்கு செயல்விளக்கம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் கணினி பயன்பாடுகள் குறித்து காணொலி காட்சி மூலம் மாணவிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

தினமணி 7/3/18

# மகளிர் கல்லூரியில் ஆய்வேடுகள் குறித்த கருத்தரங்கம்



கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய புதுவை பல்கலைக் கழக பேராசிரியர் சண்முகசுந்தரத்துக்கு நினைவுப் பரிசு வழங்குகிறார் கல்லூரிச் செயலர் செந்தில்குமார்.

விழுப்புரம், மார்ச் 6: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு சார்பில் ஒரு நாள் கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

ஆய்வு திட்ட முன்வரைவுகள் மற்றும் ஆய்வேடுகள் உருவாக்கம் என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்கின் தொடக்க விழாவுக்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவு புல முதன்மையர் சி.உத்ரா வரவேற்றார். கல்லூரிச் செயலர் சா.செந்தில்குமார் தலைமை வகித்தார். புதுவைப் பல்கலைக் கழக வணிகவியல் துறை பேராசிரியர் ஜி.சண்முகசுந்தரம் சிறப்புரையாற்றினார்.

அவர், ஆய்வியல் நெறிமுறைகளை மாணவர்கள் பின்பற்றுவதன் அவசியம், ஆய்வுத் திட்ட முன்வரைவுகள் தயாரித்தல், ஆய்வேடுகள் உருவாக்கத்துக்கான வழிமுறைகள், ஆய்வுகளின்போது எதிர்கொள்ளும் சவால்கள், ஆய்வுப்பொருள்கள், ஆய்வின் கருதுகோளின் அவசியம், ஆய்வின் வாயிலாக சமூகம் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு தீர்வுகள் ஆகியவை குறித்து விளக்கிப் பேசினார்.

முன்னதாக இ.எஸ். கல்விக் குழுமப் பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகரன், துணைப் பதிவாளர் செளந்தரராஜன், கல்லூரி முதல்வர் வி.அருணாகுமாரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தொடர்ந்து, ஆராய்ச்சியின் தோற்றம், ஆய்வுச்சிக்கல், கருதுகோள், ஆய்வுத் தரவுகளைத் திரட்டும் முறைகள், ஆய்வுத் திட்ட முன்வரைவுகள், ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தல் ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில், நான்கு அமர்வுகளாக இந்தக் கருத்தரங்கம் நடைபெற்றது. நிறைவாக மாணவிகள் தங்கள் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தனர். சிறந்த ஆய்வுக் கட்டுரைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

## தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில்

# காணொலி உரை நிகழ்ச்சி



▶ விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் காணொலி உரை நிகழ்ச்சி நடந்தது.

விழுப்புரம், மார்ச் 17: விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் காணொலி உரை நிகழ்ச்சி நடந்தது. இதில், காணொலி உரையை ம.ஓ.பி வைஷ்னவ் கர்லேஜ் முனைவர் மற்றும் இணை பேராசிரியர் அர்ச்சனப்ரசாத் நிகழ்த்தினார். இதில், வணிக மேலாண்மை துறை, இளங்கலை மாணவிகள் 88 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

இந்த உரையில் மாணவிகளுக்கு ஒருங்கிணைந்த பெருநிறுவனங்களின் அறிவு மேலாண்மை அமைப்பு மற்றும் செயல்திறனை கையகப்படுத்துவதில் மேலாண்மையின் பங்கு, அடுத்தடுத்து திட்டமிடல், முக்கிய சாவல்கள், மனிதவள கொள்கைகள் போன்றவை பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

தினகரன் 17/3/18

# விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் பட்டமளிப்பு விழா




■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் 18வது பட்டமளிப்பு விழாவில், திருச்சி பாரதிதாசன் மேலாண்மை நிறுவன ஆளுனர் குழு உறுப்பினர் நடராஜன் பால பாஸ்கர் மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கினார். அருகில் கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு, செயலாளர் செந்தில்குமார்.

**விழுப்புரம், மார்ச். 19 –**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 18 வது பட்டமளிப்பு விழா நடந்தது.

விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியின், 18 வது பட்டமளிப்பு விழா, கல்லூரி கூட்டரங்கில் நேற்று நடந்தது. கல்லூரி செயலாளர் செந்தில் குமார் தலைமை தாங்கினார். பதிவாளர் கஸ்துாரிபாய் தன சேகரன் வரவேற்றார்.

திருச்சி பாரதிதாசன் மேலாண்மை நிறுவன ஆளுநர் குழு உறுப்பினர் மற்றும் முன்னாள் இயக்குனர் நடராஜன் பால பாஸ்கர், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, இளங்கலை மாணவிகள் 704 பேர், முதுகலை மாணவிகள் 166 பேர் மற்றும் ஆராய்ச்சி மாணவிகள் 50 பேர் என மொத்தம் 920 பேருக்கு, பட்டங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு வாழ்த்தி பேசினார்.

இதில், துணை பதிவாளர் சவுந்தரராஜன், கல்லூரி முதல்வர் அருணாகுமாரி, இ.எஸ்., கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் செல்வகுமார், டாக்டர் பாலதண்டாயுதம் மற்றும் அனைத்துத்துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகளின் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினமலர் 19/3/18

# மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், மாணவிக்குப் பட்டம் வழங்குகிறார் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி நடராஜன் பால பாஸ்கர். உடன், கல்விக் குழுமச் செயலாளர் செந்தில்குமார் உள்ளிட்டோர்.

விழுப்புரம், மார்ச் 18: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் 18-ஆவது பட்டமளிப்பு விழா கல்லூரி கலையரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இ.எஸ்.எஸ்.கே. கல்விக் குழுமத்தின் செயலர் செந்தில்குமார் தலைமை வகித்தார். பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகர் முன்னிலை வகித்தார். முதல்வர் அருணாகுமாரி வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி நடராஜன் பால பாஸ்கர், கல்லூரியில் கடந்த ஆண்டு இளநிலைப் பிரிவு படிப்பை நிறைவு செய்த 705 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அவர் பேசுகையில், மாணவிகள் தங்களது எதிர்காலம் குறித்து சிந்தித்துச் செயல்பட வேண்டும். எங்கு பணியாற்ற வேண்டும் என்பதை திட்டமிட்டு, அதற்கு தகுந்தாற்போல முயன்றால், எந்த எல்லையையும் எட்டிவிடலாம் என்றார்.

இ.எஸ். கல்விக் குழுமத்தின் தலைவர் சாமிக்கண்ணு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். துணைப் பதிவாளர் செளந்தரராஜன் நன்றி கூறினார்.

தினமணி 19/3/18

மாணவி

## மாணவிகளுக்கு காணொலி மூலம் உரை



► விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரி வேதியியல் துறை அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகளுக்கு திருச்சி, புனித வளனார் தன்னாட்சி கல்லூரி வேதியியல் துறை உதவி பேராசிரியர் லியோ ஸ்டேண்ட்லி முப்பரிமாண வேதியியல் என்ற தலைப்பில் காணொலி மூலம் உரை நிகழ்த்தினார். இதில், 255 மாணவிகள் பங்கேற்றனர்.

தினகரன்
24/3/18

# தொழில் வழிகாட்டி கருத்தரங்கம்



► விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தொழில் வழிகாட்டி என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவிகள். உள்படம்: பயிற்சியாளர் ஹரிஹரன்.

தினகரன் 29/3/18

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி தினவிழா




► விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கல்லூரி தினவிழா நடைபெற்றது.

விழுப்புரம், ஏப். 4: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கல்லூரி தினவிழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் அருணகுமாரி வரவேற்றார்.

2017–18ம் கல்வியாண்டின் கல்லூரியின் வளர்ச்சி நிலை பற்றி ஆண்டறிக்கையினை கல்லூரி முதல்வர் அருணகுமாரியும், கல்வி வளர்ச்சி தொடர்பான ஆண்டறிக்கையினை புலமுதன்மையர் ஸ்ரீதேவியும், மாணவியர் நிகழ்வுகள் தொடர்பான ஆண்டறிக்கையினை புலமுதன்மையர் ஸ்ரீஜாராஜனும், ஆராய்ச்சி வளர்ச்சி தொடர்பான ஆண்டறிக்கையினை புலமுதன்மையர் (ஆராய்ச்சி) உத்ராவும், மாணவிகள் தேர்ச்சி நிலை தொடர்பான ஆண்டறிக்கையினை தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் கோவலனும் வாசித்தனர். இஎஸ்எஸ்கே கல்விக்குழுமத்தின் பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகரன் மற்றும் துணைப்பதிவாளர் சவுந்தரராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி செயலர் செந்தில்குமார், கல்லூரி தாளாளர் சுவாமிக்கண்ணு, வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) பெருவழுதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் இக்கல்வியாண்டின் முதன்மை பெற்ற இளங்கலை உயிர்வேதியியல் துறை மாணவியான சந்தியா மற்றும் முதுகலை உயிர்வேதியியல் துறை மாணவியான தெய்வானை ஆகியோருக்கு சான்றிதழ்களும், மடிக்கணினியும் பரிசாக வழங்கப்பட்டது. மேலும் இக்கல்வியாண்டின் சிறந்த துறையான உயிர்வேதியியல் துறை தேர்வு செய்யப்பட்டு அத்துறையை சிறப்பிக்கும் வகையில் பேராசிரியர்களுக்கு கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. கல்லூரி துணை முதல்வர் செல்வி நன்றி கூறினார்.

தினகரன் 5/4/18

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி

# ஆங்கில துறை பேரவை நிறைவு விழா



► விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி ஆங்கிலதுறை பேரவை நிறைவு விழா நடந்தது.

விழுப்புரம், ஏப். 6: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி ஆங்கிலதுறையின் கோப்பி ஹவுஸ் பேரவை நிறைவு விழா கல்லூரி கலையரங்கில் நடந்தது.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி ஆங்கில துறை உதவி பேராசிரியர் ஜான்போஸ்கோ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இலக்கியத்தில் அன்பு, நன்றி மற்றும் பெண்ணியத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அவரது சிறப்புரை அமைந்திருந்தது. 2017–18ம் கல்வியாண்டில் பேரவையின் சார்பில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 46 மாணவிகளுக்கு சான்றிதழ், பதக்கங்கள் வழங்கப்பட்டன.

தினகரன்
6/4/18




தினத்தந்தி
6/4/18

விழுப்புரத்தில்

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி தின விழா

விழுப்புரம், ஏப்.6–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி தின விழா கல்லூரி கலையரங்கில் நடந்தது. விழாவுக்கு கல்லூரி செயலாளர் செந்தில் குமார் தலைமை தாங்கினார். முதல்வர் அருணாகுமாரி ஆண்டறிக்கை வாசித்தார். புல முதன்மையர்கள் ஸ்ரீஜாராஜன், உத்ரா ஆகியோர் மாணவர்களின் தேர்ச்சி பற்றி அறிக்கை சமர்ப்பித்தனர். கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு சிறப்புரையாற்றினார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளுவர் பல்கலைக்கழக பதிவாளர்(பொறுப்பு) பெருவழுதி கலந்து கொண்டு கல்வியில் முதலிடம் பெற்ற மாணவிகள் சந்தியா, தெய்வானை ஆகியோருக்கு சான்றிதழ்கள் மற்றும் மடிக்கணினி ஆகியவற்றை பரிசாக வழங்கினார். விழாவில் மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடந்தன. முடிவில் துணை முதல்வர் செல்வி நன்றி கூறினார்.

தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில்

# முதலாமாண்டு வகுப்பு தொடக்கம்




▶ விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த முதலாமாண்டு வகுப்பு தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

விழுப்புரம், ஜூன் 19: விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் முதலாமாண்டு மாணவிகளுக்கான வகுப்பு தொடக்க விழா நிகழ்வானது இறை வணக்கத்துடன் துவங்கியது. இதன் தொடக்க நிகழ்வாக இஎஸ். மியூசிக் அகாடமியை சேர்ந்த மாணவிகளின் வரவேற்பு நடன நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் அருணாகுமாரி வரவேற்றார். இதையடுத்து, சான்றோர் பெருமக்களால் திருவிளக்கு ஏற்றப்பட்டது. இதில், முதலாமாண்டு மாணவிகள் மற்றும் பெற்றோர் உள்பட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இஎஸ்எஸ்கே கல்விக்குழுமத்தின் பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகரன் நோக்கவுரையாற்றினார். அதில், பெண் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் பெண்கள் வளர்ச்சியில் கல்லூரியின் பங்களிப்பு குறித்து விவரித்தார். கல்லூரி செயலர் செந்தில்குமார் சிறப்புரையாற்றினார். தாளாளர் சாமிக்கண்ணுவின் தலைமையுரையில், மாணவிகளுக்கு கல்வியின் அவசியம், சிந்தனைத்திறன் மேம்படுத்துதலின் தேவை குறித்து எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினராக சட்டமன்ற பேச்சாளர் கவிதா ஜவகர் மாணவிகளுக்கு ஊக்கமும், உத்வேகமும் அளிக்கும் வகையில் சிறப்புரையாற்றினார். இதில், முதலாமாண்டு மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் உள்பட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இஎஸ்எஸ்கே கல்விக்குழுமத்தின் துணைப்பதிவாளர் சவுந்தரராஜன் நன்றி கூறினார்.



தெய்

முதல

தினத்தந்தி
19/6/18



தினகரன் 19/6/18

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

## முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழா

விழுப்புரம், ஜூன்.19–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. இதற்கு கல்லூரி செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் அருணாகுமாரி வரவேற்று பேசினார். பட்டிமன்ற பேச்சாளர் எஸ். கவிதா ஜவகர், கல்லூரி தாளாளர் இ.சாமிக்கண்ணு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினார்கள்.

தாளாளர் சாமிக்கண்ணு பேசுகையில், பல்வேறு கனவுகளுடன் கல்லூரிக்கு வந்திருக்கும் மாணவிகளை வரவேற்கிறேன். நீங்கள் பல்வேறு வகையில் உயர்வு பெறவேண்டும் என பெற்றோர்கள் கனவு கண்டிருப்பார்கள் அவர்கள் கனவினை நனவாக்கும் வகையில் நல்லமுறையில் கல்வி பயின்று சாதனை புரியவேண்டும் என்றார்.

விழாவில் 2,500 மாணவிகள், பெற்றோர்கள், பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கல்லூரி துணை பதிவாளர் சௌந்தர்ராஜன் நன்றி கூறினார்.

தினமலர் 31/7/18

## மாணவியர் பேரவை துவக்க நிகழ்ச்சி

**விழுப்புரம், ஜூலை 31–**
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை துவக்க விழா நடைபெற்றது.

கல்லூரி செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். முதல்வர் அருணகுமாரி வரவேற்றார். பேரவை தலைவி நிரஞ்சனா அறிமுக உரையாற்றினார். இ.எஸ்.எஸ்.கே., கல்விக்குழும துணை பதிவாளர் சவுந்தரராஜன் முன்னிலை வகித்தார்.

பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகரன் கல்லூரியின் தனி சிறப்புகள், சாதனைகள் மற்றும் மாணவிகளின் திறன், தகுதி, துணிவு, ஆர்வம் ஆகியவற்றை வளர்த்து கொள்வதன் அவசியம் பற்றி சிறப்புரையாற்றினார்.

பின், கல்லூரி மாணவியர் பேரவை தலைவர் உள்பட பல்வேறு பொறுப்புகளுக்கான பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வேதியியல் துறை தலைவர் மற்றும் ஆராய்ச்சி பிரிவு இயக்குனர் முத்துசாமி, பெண் கல்வியின் அவசியம், கல்வி பெறும் வழிமுறைகள், உயர்கல்வியில் ஏற்படும் சிக்கல்கள், தன்னம்பிக்கை குறித்து விளக்கவுரையாற்றினார். பேரவை துணை தலைவி ஹஜீராபேகம் நன்றி கூறினார்.




■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மாணவியர் பேரவை துவக்க விழாவில் பங்கேற்ற பாரதிதாசன் பல்கலைக்கழக வேதியியல் துறை தலைவர் முத்துசாமிக்கு, செயலாளர் செந்தில்குமார் நினைவு பரிசு வழங்கினார்

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் ரோட்ராக்ட் சங்க பதவியேற்பு விழா



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ரோட்ராக்ட் சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா நடந்தது.

**விழுப்புரம், ஆக. 26–**

விழுப்புரம் ரோட்டரி சங்கம் சார்பில், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் ரோட்ராக்ட் சங்க புதிய மாணவியர் பிரதிநிதிகள் பதவியேற்பு விழா நடந்தது.

விழாவிற்கு விழுப்புரம் ரோட்டரி சங்க தலைவர் புதுராஜா தலைமை தாங்கினார். கல்லூரி ரோட்ராக்ட் அமைப்பு ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் வரவேற்றார்.

ரோட்ராக்ட் அமைப்பு புதிய தலைவியாக பதவியேற்ற தன்யஸ்ரீ ஏற்புரையாற்றினார். இந்திய இன்னர்வீல் சங்க கூடுதல் சபை உறுப்பினர் மற்றும் மாவட்டத் தலைவர் உஷா நந்தினி விஷ்வநாதன் கருத்துரை வழங்கினார்.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி செயலர் செந்தில்குமார், இ. ஸ். எஸ்.கே., கல்விக்குழு துணைப்பதிவாளர் சவுந்தர்ராஜன் வாழ்த்துரை வழங்கினர்.

அப்போது, கல்லூரி முதல்வர் அருணகுமாரி, மாணவியர் புல முதன்மையர்கள், விழுப்புரம் ரோட்டரி சங்க துணை ஆளுநர் மணிகண்டன், இளையோர் சேவை தலைவர் விஸ்வநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் ரோட்டரி சங்க விஜய்முத்துக்கிருஷ்ணன் நன்றி கூறினார்.

தினமலர் 26/8/18



▪ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் துறையின் பயோஹெலிக்ஸ் அசோசியேஷன் பேரவை துவக்க விழா நடைபெற்றது.

## மகளிர் கல்லூரியில் பேரவை துவக்க விழா

**விழுப்புரம், செப். 4–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் துறையின் பயோஹெலிக்ஸ் அசோசியேஷன் பேரவை துவக்க விழா நடைபெற்றது.

மாணவிகள் பேரவை தலைவி பிரியதர்ஷினி தலைமை தாங்கினார். பயோஹெலிக்ஸ் அசோசியேஷன் பேரவை செயலாளர் அப்ரின் பேகம் ஆண்டறிக்கை வாசித்தார்.

புதுவை பல்கலைக்கழக உயிர் வேதியியல் மற்றும் மூலக்கூறு உயரியல் துறை உதவி பேராசிரியர் திருநாவுக்கரசு சிறப்புரையாற்றினார். பேரவை பொருளாளர் அபிராமி நன்றி கூறினார்.

தினமலர் 4/9/18

## தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் அரோமா கெம் கிளப் தொடக்கவிழா



► விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில், சிறப்பு விருந்தினருக்கு துறைத்தலைவர் செல்வி நினைவுப்பரிசு வழங்கினார்.

விழுப்புரம், செப். 14: விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் அரோமா கெம் கிளப் தொடக்கவிழா நடந்தது. வேதியியல் துறை முதுகலை முதலாம் ஆண்டு மாணவி சிவப்பிரியா வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக சென்னை கிறிஸ்டியன் கல்லூரி, வேதியியல் துறை உதவி பேராசிரியர் ராஜதுரை விஜய் சாலமன் கலந்துகொண்டார். அவர் வேதியியல் துறை சவால்களும், வேலை வாய்ப்பு சூழலும் என்ற தலைப்பில் நவீன வேதியியலின் செயற்பாடுகள் பற்றி சிறப்புரையாற்றினார்.

அரோமா கெம் கிளப் சார்பில், சிறப்பு விருந்தினருக்கு கல்லூரி துறைத்தலைவர் செல்வி நினைவுப்பரிசு வழங்கினார். இக்கல்லூரியின் 2ம் ஆண்டு மாணவி நிவேதிதா நன்றி கூறினார்.

தினகரன் 14-09-18

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு இ.எஸ். கல்விக்குழுமத்தின் தலைவர் சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். விழுப்புரம் சிவில் நீதிபதி உமாமகேஸ்வரி கலந்துகொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து மாணவிகளுக்கு இனிப்பு வழங்கினார். தொடர்ந்து, பெண்களுக்கான பாதுகாப்பு சட்டங்கள் குறித்து விளக்கி பேசினார். அவருக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. விழாவில் கல்லூரி முதல்வர் அருணகுமாரி, இ.எஸ். எஸ்.கே. கல்விக்குழுமத்தின் பதிவாளர் கஸ்தூரிபாய் தனசேகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

17/09/19
தினத்தந்தி

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் கருத்தரங்கம்



► விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் பேராசிரியர் அரவிந்தன் மாணவிகளுக்கு வணிக பகுப்பாய்வு குறித்து காணொலி மூலம் விளக்கினார்.

விழுப்புரம், செப். 20: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகமேலாண்மை என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடந்தது. இதில் கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக மேலாண்மை துறை பேராசிரியர் அரவிந்தன் வணிக மேலாண்மை துறை இளங்கலை மாணவிகளுக்கு காணொலி மூலம் வணிக பகுப்பாய்வு என்ற தலைப்பில் விளக்கம் அளித்தார். மேலும் வணிக பகுப்பாய்வு, அதன் வகைகள், பகுதிகளின் செயல்திறனை கையகப்படுத்துவதில் திறன் மேலாண்மையின் பங்கு ஆகியவை குறித்து விளக்ினார். இதில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

20/09/18
தினகரன்


## மகளிர் கல்லூரியில் காணொளி கருத்தரங்கு

விழுப்புரம், செப். 29–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கான காணொளி கருத்தரங்கம் நடந்தது.

உயிர் வேதியியல் துறை சார்பில் இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகளுக்கு 'மூலிகை மருத்துவத்தில் உயிர் தகவலியலின் பயன்பாடு' என்ற தலைப்பில் காணொளி கருத்தரங்கம் நடந்தது.

பேராசிரியர் ஜெயச்சந்திரன் மூலிகை மூல பொருட்களை கண்டறியும் முறைகள் குறித்தும், மருத்துவ குணமுடைய பொருட்களை கண்டறியும் முறைகள் பற்றி விளக்கமளித்தார். இதில், 144 மாணவிகள் பங்கேற்று பயனடைந்தனர்.



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவிகளுக்கான காணொளி கருத்தரங்கம் நடைபெற்றது.

29/09/18
தினமணி

# மகளிர் கல்லூரியில் வாசகர் சங்கம் துவக்கம்




■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், நூலகத்துறை வாசகர் சங்கம் பேரவை துவக்க விழா நடந்தது.

விழுப்புரம், நவ.1–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், நூலகத்துறை வாசகர் சங்கம் பேரவை துவக்க விழா நடந்தது.

விழாவிற்கு, மாணவிகள் பேரவை தலைவி நதியா வரவேற்றார். பேரவை துணைத்தலைவி ரஷீதா பேகம் ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரி முதல்வர் அருண்குமார் சிறப்புரையாற்றினார். திருவள்ளுவர் பல்கலைக்கழக நூலகத்துறை பேராசிரியர் விநாயகமூர்த்தி துவக்கவுரையாற்றினார்.

இதில், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர்.

பேரவை உறுப்பினர் ரத்னமலா நன்றி கூறினார்.

தினமலர் 2/11/18



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த இரண்டாம் பருவ தொடக்க விழாவில், அன்னை வேளாங்கண்ணி கல்லூரி முதல்வர் உலகநாயகி பழனி பேசினார்.

# மகளிர் கல்லூரியில் பருவ துவக்க விழா

விழுப்புரம், நவ. 21–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இரண்டாம் பருவ தொடக்க விழா நடந்தது.

கல்லூரி முதல்வர் அருணகுமாரி தலைமை தாங்கினார். மாணவியர் பேரவை தலைவி நிரஞ்சனாதேவி வரவேற்றார். துணை பதிவாளர் சவுந்தரராஜன், தமிழாய்வு துறை தலைவர் மங்கையர்கரசி முன்னிலை வகித்தனர்.

அன்னை வேளாங்கண்ணி கல்லூரி முதல்வர் உலகநாயகி பழனி, 'வெளிச்சம் வெகுதூரத்தில் இல்லை' தலைப்பில் சிறப்புரையாற்றினார். பேரவை துணை தலைவி ஹாஜிரா நன்றி கூறினார்.

தினமலர் 21/11/18

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# 2–ம் பருவ தொடக்க விழா



விழுப்புரம், நவ.22–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 2–ம் பருவ தொடக்க விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் அருணாகுமாரி தலைமை தாங்கினார். மாணவியர் பேரவை தலைவி நிரஞ்சனாதேவி வரவேற்றார். துணைப்பதிவாளர் சவுந்தர்ராஜன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக அன்னை வேளாங்கண்ணி கல்லூரி முதல்வர் உலகநாயகி பழனி கலந்துகொண்டு 'வெளிச்சம் வெகுதூரத்தில் இல்லை' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். விழாவில் தமிழாய்வுத்துறை தலைவர் மங்கையர்கரசி மற்றும் பேராசிரியர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர். முடிவில் மாணவியர் பேரவை துணைத்தலைவி ஹாஜிரா நன்றி கூறினார்.

தினத்தந்தி
22.11.18




தெய்வானை அம்மாள் கல்லூரியில்

# மாணவிகளுக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சி

விழுப்புரம், நவ.28–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவிகள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட ரோட்டரி சங்க தலைவர் புதுராஜா தலைமை தாங்கினார். கல்லூரி ரோட்ராக்ட் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் வரவேற்றார். இ.எஸ்.எஸ்.கே.கல்விக்குழும துணைப்பதிவாளர் சவுந்தர்ராஜன் வாழ்த்துரை வழங்கினார். ஒடிசா மாநிலம் பலன்ஜீர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிவசுப்பிரமணியன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு போட்டி தேர்வுகளை எதிர்கொள்ளும் முறைகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

இதில் இளையோர் சேவை தலைவர் விஸ்வநாதன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், ஆராய்ச்சி முதன்மையர்கள், ரோட்டரி சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டனர். முடிவில் ரோட்டரி சங்க செயலாளர் விஜய்முத்துகிருஷ்ணன் நன்றி கூறினார்.

28.11.18
தினத்தந்தி



விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இயற்பியல் கருத்தரங்கு

விழுப்புரம், டிச.15–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இயற்பியல் துறை சார்பில் காணொலி காட்சி கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கிற்கு வந்திருந்த அனைவரையும் கல்லூரி உதவி பேராசிரியை மங்கையர்கரசி வரவேற்றார். ஐதராபாத் ஆரோராஸ் சயின்டிபிக் டெக்னாலஜிக்கல் அண்ட் ரிசர்ச் அகாடமி இயற்பியல் துறையின் உதவி பேராசிரியர் அருண்குமார் சிறப்புரையாற்றினார். இதில் படிகம் மற்றும் அதன் வகைகள், தன்மைகள், பயன்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. அப்போது இயற்பியல் துறை மாணவிகள் மற்றும் உதவி பேராசிரியர்கள் கலந்துகொண்டனர். முடிவில் உதவி பேராசிரியை மார்கரேட் லூர்துபெனாசிர் நன்றி கூறினார்.

தினத்தந்தி
15/12/18


# விழுப்புரம் மகளிர் கல்லூரியில் விளையாட்டு விழா




போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவியர் குழுவுக்கு பரிசுக் கோப்பையை வழங்குகிறார் சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் நடுவர் ரூபாதேவி.

**விழுப்புரம், டிச. 18:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூ
ரியில் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.
கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்த விழா
தொடக்க நிகழ்ச்சியில் கல்லூரி மாணவியர் புல முதன்மையர்
ஆர்.ராஜேஸ்வரி வரவேற்றார். சர்வதேச கால்பந்து சம்மேளன நடு
வர் ரூபாதேவி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று போட்டிகளைத்
தொடக்கி வைத்தார். ஒலிம்பிக் கொடியை இ.எஸ்.கல்விக் குழும
துணைப் பதிவாளர் செளந்திரராசன் ஏற்றி வைத்தார். கல்லூரி
முதல்வர் ஏ.வி.அருணாகுமாரி தொடக்க உரையாற்றினார்.
விளையாட்டுத் துறைச் செயலர் என்.ஜனனி தலைமையில் மாண
விகள் உறுதிமொழி ஏற்றனர். வீராங்கனைகள், விளையாட்டுக்கான
ஒலிம்பிக் ஜோதியை ஏற்றினர். தொடர்ந்து, பல்வேறு விளையாட்
டுப் போட்டிகள் நடைபெற்றன. கலை நிகழ்ச்சிகள், யோகா மற்றும்
தற்காப்புக் கலைகளை செய்து காண்பித்தனர். நிறைவில், விளை
யாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற குழுவினருக்கு சர்வதேச கால்
பந்து சம்மேளன நடுவர் ரூபாதேவி பரிசுக் கோப்பைகள் வழங்கிப்
பேசினார். பேராசிரியர்கள், மாணவிகள் பலர் கலந்துகொண்டனர்.
கலை அறிவியல் கல்லூரி முதல்வர் மனோகரன் நன்றி கூறினார்.

தினமணி
19/12/18



## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# சமத்துவ பொங்கல் விழா

விழுப்புரம், ஜன.19–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு கல்லூரி செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். அதனை தொடர்ந்து கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு மண் பானையில் பொங்கலிட்டு வழிபட்டனர். பின்னர் மாணவிகளுக்கிடையே கோலப்போட்டி, உறியடி மற்றும் பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. விழாவையொட்டி தமிழர்களின் பண்பாட்டை போற்றுகிற வகையில் கரகாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், மயிலாட்டம், தப்பாட்டம், நடனம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

தினத்தந்தி
19/01/19

# E.S. கல்வி குழுமத்தின் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்...



தினகரன்
15/01/19

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் முன்னாள் மாணவிகள் சந்திப்பு




► விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் முன்னாள் மாணவிகள் சந்திப்பு கூட்டம் நடந்தது.

விழுப்புரம், ஜன. 30: விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் முன்னாள் மாணவிகள் சந்திப்பு கூட்டம் நடந்தது. முன்னாள் மாணவிகள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சுபாஷினி வரவேற்றார். கல்லூரி முதல்வர் அருணகுமாரி அறிமுக உரையாற்றினார். இஎஸ்எஸ்கே கல்விக் குழுமத்தின் துணை பதிவாளர் சவுந்திரராஜன் கலந்துகொண்டு மாணவிகளின் முன்னேற்றம், தலைமைப்பண்பினை வளர்த்தல், எதிர்காலத்தை திட்டமிட்டு செயல்படுத்தலின் அவசியம், உயர்கல்வியினை மேம்படுத்தும் நிலைகள், பன்னாட்டு கருத்தரங்குகளில் மாணவிகள் பங்களித்தலின் பயன்கள் குறித்து விவாதித்தார். வணிகவியல் துறை பேராசிரியை கீதா ஆண்டறிக்கை வாசித்தார்.

இதில் முன்னாள் மாணவர்கள் தங்களின் கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். மேலும் இக்கல்லூரியில் பயின்று மேலைநாடுகளில் வேலைவாய்ப்புகளை பெற்ற மாணவர்கள் காணொலி காட்சியின் மூலம் தங்களின் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர். மாணவிகளுக்கு கல்லூரி சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது. தொடர்ந்து மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது. இயற்பியல் துறை பேராசிரியை மார்கரேட் பேனசர் நன்றி கூறினார்.

தினமணி
30/01/19

## LAMP LIGHTING AND PLEDGING




At E.S. College of Nursing, the lamp lighting ceremony ("ARGIA") of the 11th batch 2018 of B.Sc (N) and DGNM students and 3rd Graduation Ceremony (2013-2017) batch was held on the 5th of January. Dr.B.V.Kathyayani,M.Sc(N),Ph.D Professor cum Principal NIMHANS College of Nursing, Bangalore was the Chief Guest of this programme. Mr.Karthi - Asso. Professor, E.S.College of Nursing, Villupuram welcomed the gathering.

The Chairman, The Secretary, Deputy Registrar and Principal welcomed Chief Guest. The students took the Nurse's Pledge which was guided by Prof. Mrs. M. Porselvi, Principal, E.S college of Nursing. Then the students sung the lighting song, which was followed by the Presidential address, given by Mr.Swamikannu, Chairman.

The Felicitation address was given Mr.Soundarajan, Deputy Registrar. The secretary Mr. Senthil Kumar declared the graduation day open. Prof. Mrs. Porselvi, M.Sc (N), Principal, presented the college Annual Report 2018-2019. The Chief guest Dr. B. V. Kathyayani in her speech, insisted on the importance of being self-aware, empathetic, having effective communication and decision making skills and more.

31 | 01 | 19 - THE HINDU

# கருத்தரங்கம்




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில். இந்திய செலவு கணக்காளர் நிறுவன மத்தியக்குழு உறுப்பினர் ராஜூவிற்கு, முதல்வர் அருணகுமாரி நினைவு பரிசு வழங்கினார்.

விழுப்புரம், பிப். 6–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

வணிகவியல் ஆராய்ச்சி துறை சார்பில் 'எமர்ஜிங் டிரண்ட்ஸ் இன்பைனான்ஸ் – அக்கவுண்ட்ஸ் அண்ட் அக்கவுண்டிங் எரேனா' ஆய்வு தலைப்பில் தேசிய கருத்தரங்கம் நடந்தது. கல்லூரி முதல்வர் அருணகுமாரி தலைமை தாங்கினார்.

வணிகவியல் துறைத் தலைவர் செல்வகுமார் வரவேற்றார்.

இந்திய செலவு கணக்காளர் நிறுவன மத்தியக் குழு உறுப்பினர் ராஜூ சிறப்புரையாற்றினார். கருத்தரங்கில், இந்திய கணக்கியல் தர நிலைகள், உலகளாவிய கணக்கியல் தர நிலைகள், பொருட்கள் மற்றும் சேவை வரி புரிதல்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

கருத்தரங்கில், பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். பேராசிரியை ஆனந்தி நன்றி கூறினார்.

தினமலர் 06.02.19

# துறைத்தலைவருக்கு வாழ்த்து



முனைவர் பட்டம் பெற்ற விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி தமிழாய்வு துறைத்தலைவர் மங்கையர்க்கரசியை கல்லூரி செயலர் செந்தில்குமார் பாராட்டி வாழ்த்தினார்.

தினமலர் 06.02.19

# தெய்வானை மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு

விழுப்புரம், பிப். 11–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தமிழாய்வு துறை சார்பில் காணொளி கருத்தரங்கம் நடைபெற்றது.

மதுரை விவேகானந்தா கல்லூரி உதவி பேராசிரியர் பாலமுருகன் பங்கேற்று, 'சங்க இலக்கியத்தில் சூழலியல் சிந்தனைகள்' தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

இதில், சங்க இலக்கியத்தில் காணப்படும் இயற்கை கூறுகள், இயற்கையை தமிழர்கள் போற்றிய திறம் ஆகியன குறித்து விளக்கப்பட்டது.

கருத்தரங்கில் தமிழ்த் துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தமிழாய்வு துறை சார்பில் காணொளி கருத்தரங்கம் நடைபெற்றது.

# THEIVANAI AMMAL COLLEGE FOR WOMEN
(Autonomous)

Harness Girl Power

## WOMEN EMPOWERMENT & ENTREPRENEURSHIP

TACW
is privileged to conduct
WOMEN EMPOWERMENT & ENTREPRENEURSHIP
in our College Campus.
We are proud to invite Smt. Smriti Irani,
who has consented to grace the occasion.



Chief Guest

## Smt. SMRITI IRANI

Hon'ble Minister of Textiles, Govt. of India

Date: 14.02.19, Thursday | Time: 11.45 am to 12.45 pm
Venue: Theivanai Ammal College For Women, Villupuram

**Management, Dy. Registrar, Principal, Staff and Students of Theivanai Ammal College For Women**

# 55 ஆண்டுகள் நிறைவேறாத அடிப்படை வசதிகளை மோடி நிறைவேற்றியுள்ளார்

## ஸ்மிருதி இரானி பெருமிதம்




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகிறார் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி.

விழுப்புரம், பிப்.14: இந்தியாவில் 55 ஆண்டுகளில் நிறைவேற்றாத அடிப்படை வசதிகளை, 55 மாதங்களில் பிரதமர் மோடி நிறைவேற்றியுள்ளதாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி பெருமிதம் தெரிவித்தார்.

விழுப்புரம், கடலூர் மாவட்ட பெண் தொழில் முனைவோர் மற்றும் அறிவுசார் அணியினருக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பாளர் எஸ்.தியாகராஜன் வரவேற்றார். ஜவுளி வியாபாரிகள் சங்கத் தலைவர் கே.ஜெ.ரமேஷ், வணிகர் சங்க கூட்டமைப்புத் தலைவர் ஆர்.ராமகிருஷ்ணன், அரிமா சங்க ஆளுநர் எம்.சரவணன், ரோட்டரி சங்க ஆளுநர் எஸ்.பிரையான், கடலூர் மாவட்ட வணிகர்கள் சங்க கூட்டமைப்புத் தலைவர் டி.சண்முகம், அரிமா சங்க துணைத் தலைவர் எஸ்.அசோக், லக் உத்யோக் பாரதி அமைப்பின் தலைவர் வி.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இ.எஸ். கல்விக் குழுமத் தலைவர் இ.சாமிக்கண்ணு தொடக்கி வைத்துப் பேசினார்.

சிறப்பு விருந்தினராக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி பங்கேற்றுப் பேசியதாவது:

பெண்கள் முன்னேற்றத்துக்காகவும், வலிமையான, தூய்மையான இந்தியாவை உருவாக்கவும் பிரதமர் மோடி செயலாற்றி வருகிறார். பெண்களுக்கான அடிப்படை வசதிகள் பெறுவதற்கு, வீடுகளிலும், பள்ளி, கல்லூரிகளிலும் தனி நபர் கழிப்பிடத் திட்டங்களை அவர் செயல்படுத்தினார். ஓராண்டில் 4.20 லட்சம் தனி நபர் கழிப்பறைகளைக் கட்டி, 55 ஆண்டுகளாக தொடர்ந்த பிரச்னைக்கு, ஓராண்டில் தீர்வு கண்டார்.

ஏழைகளுக்கு எரிவாயு இணைப்பு கிடைப்பதற்காக பிரதமர் அறிவுறுத்தியதால், ஒரு கோடி பேர் மானியத்தை விட்டுக் கொடுத்தனர். இதனால் 6 கோடி பேருக்கு எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 55 ஆண்டுகளில் 12 கோடி எரிவாயு இணைப்புகள் தான் வழங்கியுள்ளனர். ஆனால், மோடி பிரதமரான பிறகு 8 கோடி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.


ஏழைகளும் வங்கிகளுக்குச் செல்லும் நடைமுறையை கொண்டு வந்துள்ளோம்.

முத்ரா கடன் திட்டத்தில் 15 கோடி பேர் கடன் பெற்றுள்ளனர். இதில், 73 சதவீதம் பெண்கள் கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.

ஏழைகளுக்கான ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில், ரூ.5 லட்சம் வரை சிகிச்சை பெறும் திட்டம் தொடங்கப்பட்டு 1,300 பேர் பயனடைந்துள்ளனர். பெண் ஊழியர்களுக்கு 26 வாரங்கள் கர்ப்பகால விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது என்றார்.

வழக்குரைஞர்கள், பொறியாளர்கள், அரிமா, ரோட்டரி, வணிகர் சங்கத்தினர், கல்லூரி மாணவிகள் பலர் கலந்துகொண்டனர்.

தினமணி
15.02.19




கருத்தரங்கில் மத்திய மந்திரி ஸ்மிருதி இரானி பேசியபோது எடுத்த படம். அருகில் இ.எஸ். கல்விக்குழும தலைவர் சாமிக்கண்ணு, கல்லூரி செயலாளர் செந்தில்குமார் உள்ளனர்.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்:

# பெண்கள் கல்வி கற்றால் நாடு முன்னேறும்

## மத்திய மந்திரி ஸ்மிருதி இரானி பேச்சு

விழுப்புரம், பிப்.15– பெண்கள் கல்வி கற்றால் நாடு முன்னேறும் என்று தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் மத்திய மந்திரி ஸ்மிருதி இரானி பேசினார்.

### கருத்தரங்கம்

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நேற்று மகளிர் தொழில் முனைவோர் மேம்படுத்துதல் தொடர்பான கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு இ.எஸ். கல்விக்குழும தலைவர் இ.சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். முதல்வர் அருணாகுமாரி வரவேற்றார்.

கருத்தரங்கை மத்திய ஜவுளித்துறை மந்திரி ஸ்மிருதி இரானி, குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:–

### பெண் கல்வி

ஆண்களுக்கு இணையாக பெண்கள் வலுப்பெறுவது கல்வியால் மட்டுமே. பெண்கள் தினமும் விறகு பொறுக்கி வந்து சமையல் செய்து அடுப்படியில் முடங்கி கிடப்பதை மாற்ற முடியும் என்றால் அது, அவர்கள் படித்தால் மட்டும் தான் முடியும். பெண்களுக்கென தனியாக கழிவறை, இந்தியாவில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் முழுமையாக இல்லை. ஏன் பெரிய நகரங்களில் கூட பெரும்பாலும் கழிவறை வசதி இல்லாமல் கடந்த 55 ஆண்டுகளாக இருந்தது.

நரேந்திரமோடி, ஆட்சிக்கு வந்தபிறகு கடந்த் 12 மாதங்களில் 4¼ லட்சம் கழிவறைகள் பள்ளிகளுக்கும், தனி நபர் குடும்பத்தினருக்கும் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

### நாட்டின் வளர்ச்சி

பிரதமர் மோடி எடுத்து வரும் நடவடிக்கைகள் மூலம் நம் நாடு பொருளாதாரத்தில் உலக அளவில் 6–வது நாடாக வளர்ச்சி அடைந்துள்ளது. கடந்த 55 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 34 கோடி ஏழை மக்கள் வங்கி கணக்கை தொடங்கி உள்ளனர். அந்த வங்கி கணக்கின் மூலம் அவர்களுக்கான அனைத்து மானியங்களும் செலுத்தப்பட்டு வருகிறது.

தற்போது பெண்கள் முன்னேற வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆயுஸ்மான் பாரத் என்ற மருத்துவ காப்பீட்டின் மூலம் ரூ.5 லட்சம் வரை இலவச மருத்துவ வசதி பெறும் வாய்ப்பை மோடி ஏற்படுத்தி உள்ளார். அதேபோல் 'முத்ரா யோஜனா' திட்டத்தின் கீழ் ஏழை மக்கள் எளிதாக வங்கி கடன் பெற்று தொழில் தொடங்கி உள்ளனர். இந்தியாவில் 15 கோடி நபர்கள் இதில் கடன் பெற்று உள்ளனர். இவர்களில் 73 சதவீதம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் கல்வி கற்றால் தான் நாடு முன்னேற்றம் அடையும்.

இவ்வாறு அவர் பேசினார்.

### கலந்து கொண்டவர்கள்

கருத்தரங்கில் இ.எஸ். கல்வி அறக்கட்டளை இயக்குனர் சாந்தா சாமிக்கண்ணு, கல்விக்குழும துணைப்பதிவாளர் டாக்டர் சவுந்தர்ராஜன், தேர்வு கட்டுப்பாட்டாளர் டாக்டர் செல்வக்குமார், இ.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மனோகரன், இ.எஸ். நர்சிங் கல்லூரி முதல்வர் பொற்செல்வி, மகாலட்சுமி குருப்ஸ் உரிமையாளர் ரமேஷ் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினத்தந்தி
15-02-19

இந்து தமிழ் திசை

## பிரதமர் மோடியின் சீர்திருத்த நடவடிக்கையால்

# உலக பொருளாதாரத்தில் இந்தியா 6-வது இடம்

**● விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரி விழாவில் அமைச்சர் ஸ்மிருதி இராணி பெருமிதம்**

■ விழுப்புரம்

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 'மகளிர் தொழில் முனைவோர் மேம்படுத்துதல்' என்ற தலைப்பில் நேற்று கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கிற்கு கல்லூரியின் தலைவர் சாமிக்கண்ணு தலைமையேற்றார். ஜவுளி விற்பனையாளர்கள் சங்கத் தலைவர் ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி பேசியது:




▶▶ கருத்தரங்கில் மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி பேசுகிறார்.

பெண்கள் அடுப்படியில் முடங்கி கிடப்பதை மாற்ற வேண்டும் என்றால், அவர்கள் படித்தால் மட்டும் தான் அது முடியும்.

கடந்த 55 ஆண்டுகளாக பெண்களுக்கான தனியாக கழிப்பறை இந்தியாவில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் முழுமையாக இல்லை. ஏன் பெரிய நகரங்களில் கூட கழிப்பறை வசதி இல்லாமல் இருந்தது. பாஜக ஆட்சிக்கு வந்த பின் 4.25 லட்சம் கழிப்பறைகள் பள்ளிகளுக்கும், தனியார் குடும்பத்தினருக்கும் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அளித்த வாக்குறுதியை நம்பி 1 கோடி வசதி படைத்த குடும்பத்தினர் தங்களுக்கு எரிவாயு இணைப்பு மானியம் தேவை இல்லை என திருப்பி அளித்துள்ளனர். பிரதமர் எடுத்த சீர்திருத்த நடவடிக்கை மூலம் நம் நாடு பொருளாதாரத்தில் 6வது நாடாக உலக அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது.

கடந்த 55 ஆண்டுகளில் இல்லாது அளவிற்கு 34 கோடி ஏழை மக்கள் வங்கி கணக்கைத் தொடங்கி உள்ளனர். அந்த வங்கி கணக்கின் மூலம் அவர்களுக்கான அனைத்து மானியங்களும் செலுத்தப்பட்டு வருகிறது. தற்போது பெண்கள் முன்னேற வேண்டிய நேரம் வந்து விட்டது. "ஆயுஸ்மான் பாரத்" என்ற மருத்துவ காப்பீட்டின் மூலம் ரூ 5 லட்சம் வரை இலவச மருத்துவ வசதி பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏழை, எளிய மக்கள் ஒரு தொழில் தொடங்க வேண்டும் என்றால் தங்களது நகை, வீடு, நிலம் ஆகிய வற்றை அடமானம் வைத்து தனியாரிடம் கடன் பெற்று வந்தனர். ஏழை மீண்டும் ஏழையாக ஆனார்கள். தற்போது மோடி அறிவித்த "முத்ரா யோஜனா" திட்டத்தின் கீழ் ஏழை மக்கள் எளிதாக வங்கிக் கடன் பெற்று தொழில் தொடங்கி உள்ளனர். இந்தியாவில் 15 கோடி நபர்கள் இதில் கடன் பெற்று உள்ளனர், இதில் 73 சதவீம் பெண்கள் என்பது குறிப்பிடதக்கது. விவேகானந்தர் சொன்னது போல், 'பெண்கள் கல்வி கற்று முன்னேறினால் இந்தியா முன்னேறும்'. இவ்வாறு அவர் பேசினார்.

தெய்வானை அம்மாள் கல்லூரியின் சார்பில் டெல்லியில் நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி பங்கேற்கும் மாணவர்களுக்கான நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் முதுகலை ஆங்கிலத்துறை மாணவி அர்ச்சனா, தேசிய மாணவர் படையின் இணை அதிகாரிகளுக்கான பயிற்சி முகாமில் பங்கேற்கும் விஜய சண்முகேஸ்வரி ஆகியோரை அமைச்சர் ஸ்மிருதி இராணி பாராட்டினார்.

முன்னதாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன் வரவேற்புரை வழங்கினார். தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் முதல்வர் யு.ஏ. அருணகுமாரி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். நிறைவாக தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் செயலர் செந்தில் குமார் நன்றி கூறினார்.

இந்து தமிழ்
15.02.19

தினகரன் மாவட்டம்

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# பெண் முன்னேற்ற தொழில் முனைவோர் நிகழ்ச்சி



► விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட மத்திய அமைச்சர் ஸ்மிருதி ராணிக்கு கல்லூரி செயலர் செந்தில் குமார் நினைவு பரிசு வழங்கினார். அருகில் இஎஸ்எஸ்கே கல்வி குழும தலைவர் சாமிக்கண்ணு.

விழுப்புரம், பிப். 15: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பெண் முன்னேற்ற தொழில் முனைவோர் நிகழ்ச்சி தொடங்கியது. சிறப்பு விருந்தினராக மத்திய ஜவுளி துறை அமைச்சர் ஸ்மிருதி ராணி பங்கேற்றார். ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன் வரவேற்புரை வழங்கினார். துணிக்கடை உரிமையாளர்கள் சங்கத்தலைவர் மகாலட்சுமி குரூப்ஸ் ரமேஷ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இஎஸ்எஸ்கே கல்விக் குழுமத்தின் தலைவர் மற்றும் விழுப்புரம் சமூகநீதி பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் சாமிக்கண்ணு நோக்கவுரை வழங்கினார். அவரது உரையில் கிராமப்புற பெண்கள் அனைத்து துறையிலும் தன் கால் தடங்களை பதித்து வருகின்றனர். விண்வெளி துறையில் கால் பதிக்கும் அளவுக்கு மாணவர் சமுதாயம் வளர்ச்சி அடைந்துள்ளது என்றார்.

தெய்வான்னை அம்மாள் மகளிர் கல்லூரி முதல்வர் அருணகுமாரி, சிறப்பு விருந்தினர் மத்திய அமைச்சர் ஸ்மிருதி ராணியை பற்றி அறிமுகவுரை ஆற்றினார். அதில் பல்வேறு சமூக நல அமைப்புகளில் பொறுப்புகளை ஏற்று திறம்பட செயல்படக்கூடியவர் என்று புகழாரமும் சூட்டினார்.

## மத்திய அமைச்சர் பங்கேற்பு

பின்னர் மத்திய அமைச்சர் ஸ்மிருதி ராணி பேசும் போது, இந்தியாவின் எதிர்கால தூண்கள் இளம் தலைமுறையினர். அவர்கள் இன்றைய காலகட்டத்தில் பிரச்னைகளையும், சவால்களையும் எதிர்கொள்வதற்கு பல்வேறு மொழிகளை கற்றுக் கொண்டு சிறந்து விளங்க வேண்டும். மகாத்மா காந்தி முதல் முதலாக பெண்களுக்காக போராடியவர். பெண் கல்வி அவசியம். 55 ஆண்டுகளில் பெண் கல்வியை 4 லட்சத்து 25 ஆயிரம் பெண்கள் பிரதமர் நரேந்திர மோடியால் கல்வி கற்றுள்ளனர் என கூறினார். இந்நிக்ழ்ச்சியில் லயன் ஆர்.சந்திரன், சரவணன், சண்முகம், ஜெயகுமார், ராமமூர்த்தி மற்றும் பல்வேறு தொழில் துறை சாதனையாளர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

தெய்வானை அம்மாள் கல்லூரியின் முதுகலை ஆங்கிலத்துறை மாணவி அர்ச்சனா, புதுடெல்லியில் பிரதமர் மோடி பங்குபெறும் பாராளுமன்றத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கும், குவாரியில் நடைபெற்ற தேசிய மாணவர் படையின் இணை அதிகாரிகளுக்கான பயிற்சி முகாமில் தெய்வானை அம்மாள் கல்லூரியின் தேசிய மாணவர் படையின் ஒருங்கிணைப்பாளர் விஜய சண்முண்டீஸ்வரிக்கும், மத்திய அமைச்சர் ஸ்மிருதி ராணி சிறப்பு செய்தார். இந்நிக்ழ்ச்சியின் நிறைவாக தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி செய்லர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

தினகரன்
15-02-19

# இந்தியாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றவர் மோடி

## மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி புகழாரம்

விழுப்புரம், பிப். 15-

'பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலைக்குச் சென்ற இந்தியாவை, பிரதமர் மோடி உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார்' என மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிருதி இரானிபேசினார்.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பெண் முன்னேற்ற தொழில் முனைவோர் நிகழ்ச்சி நடந்தது.

இ.எஸ்., கல்விக்குழுமம் மற்றும் சமூகநீதி பாதுகாப்பு இயக்க தலைவர் சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன் வரவேற்றார். முதல்வர் அருணகுமாரி முன்னிலை வகித்தார்.

அரிமா சங்க நிர்வாகிகள் சந்திரன், சரவணன், சண்முகம், ஜெயக்குமார், ராமமூர்த்தி உட்பட பல் வேறு துறைகளைச் சேர்ந்த சாதனையாளர்கள் பங்கேற்றனர்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பெண் முன்னேற்ற தொழில் முனைவோர் தலைப்பில் நடந்த நிகழ்ச்சியை மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். அருகில், இ.எஸ்., கல்விக்குழுமம் தலைவர் சாமிக்கண்ணு.

நிகழ்ச்சியில், லோக்சபாவில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரி முதுகலை ஆங்கிலத்துறை மாணவி அர்ச்சனா, குவாலியரில் நடந்த தேசிய மாணவர் படையின் இணை அதிகாரிகளுக்கான பயிற்சி முகாமில் பங்கேற்ற தேசிய மாணவர் படை ஒருங்கிணைப்பாளர் விஜய சாமுண்டீஸ்வரி ஆகியோரை மத்திய மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி பாராட்டி கவுரவித்து பேசியதாவது:

பெண்கள் முன்னேற்றம் கல்வியால் தான் உள்ளது. அப்போது தான் அவர்களின் வாழ்க்கை தரம் உயரும் என்ற விவேகானந்தரின் கனவை தற்போது நினைவாக்கி கொண்டிருப்பவர் பிரதமர் மோடி.

பெண்கள் சமையலறையில் இருந்த காலங்கள் மறைந்து, தற்போது படித்து தொழில் முனைவோர்களாக உருவாகி வருகின்றனர்.

பெண்கள் அடிப்படை உரிமைகளைப் பெற வேண்டும். வீடு, பள்ளி, கல்லூரிகளில் பெண்களுக்கு என தனி கழிப்பறை கடந்த 55 ஆண்டுகால ஆட்சியில் கனவாகவே இருந்தது. இந்த கனவை, பிரதமர் மோடி செயல்படுத்தி உள்ளார். குறுகிய காலத்தில் ஏழை பெண்களுக்கு இலவச காஸ் இணைப்பு கிடைத்துள்ளது. பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலைக்குச் சென்ற இந்தியாவை, மோடி உயர்ந்த நிலைக்கு கொண்டு வந்துள்ளார்

இவ்வாறு ஸ்மிருதி இரானி பேசினார்.

மகளிர் கல்லூரி செயலர் செந்திலகுமார் நன்றி கூறினார்.

தினமலர்
15.02.19

## விழுப்புரத்தில்

# தொழில்நுட்ப கருத்தரங்கம்



விழுப்புரத்தில் நடந்த கருத்தரங்கில் முதன்மை கல்வி அலுவலர் முனுசாமி பேசினார்.

விழுப்புரம், பிப். 16: விழுப்புரம் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி சார்பில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் கல்லூரி வளாகத்தில் நடந்தது. இளஸ் கல்விக்குழும துணைப்பதிவாளர் சவுந்தர்ராஜன் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் அருணாகுமாரி முன்னிலை வகித்தார். ராஜேஸ்வரி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் முனுசாமி கலந்து கொண்டு கண்காட்சி மற்றும் கருத்தரங்கை துவக்கி வைத்தார். மேலும் கட்டுரை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். மாவட்ட வேலைவாய்ப்பு உதவி இயக்குநர் பாஸ்கரன் போட்டி தேர்வுகள் குறித்து பேசினார். முன்னாள் படைவீரர்கள் நல உதவி இயக்குநர் அருள்மொழி ராணுவத்தில் வேலைவாய்ப்பு குறித்து பேசினார். மாவட்ட தொழில்மைய இணை இயக்குநர் சொக்கலிங்கம் சுயதொழில் குறித்து பேசினார். இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் வேல் முருகன் நன்றி கூறினார்.

தினகரன் - 16.02.19

...லூரியில்

# பட்டமளிப்பு விழா



விழுப்புரம், பிப்.27-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 19-வது பட்டமளிப்பு விழா கல்லூரி கலையரங்கத்தில் நடை பெற்றது. விழாவிற்கு இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் செய லாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். கல்லூரியின் துணைப்பதிவாளர் சவுந்தர்ராஜன், தேர்வு கட்டுப்பாட்டாளர் செல்வக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் அருணாகுமாரி வரவேற்றார்.

விழாவில் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் குர்மீத்சிங் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு இளங்கலை பட்டப்படிப்பை நிறைவு செய்த 633 மாணவி களுக்கும், முதுகலை பட்டப்படிப்பை நிறைவு செய்த 100 மாணவிகளுக்கும் பட்டங்களை வழங்கி பேசினார்.

தொடர்ந்து, பல்வேறு பாடங்களில் முதலிடம் பிடித்த மாண விகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. இதில் கல்லூரி துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் பலர் கலந்துகொண்டனர். முடிவில் கல்லூரியின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு முதன்மையர் உத்ரா நன்றி கூறினார்.

தினத்தந்தி 27.02.19

சிறப்பு விருந்தினராக, புதுவை மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் கலந்து கொண்டு, பட்டம ரியர்கள், மாணவிகள், மாணவிகளின் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தினமணி -- 24.02.19

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் பட்டமளிப்பு

விழுப்புரம், பிப். 25– விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் (தன்னாட்சி) 19வது பட்டமளிப்பு விழா நடந்தது.

கல்லூரி கலையரங்கில் நடந்த விழாவை, இ.எஸ்.எஸ்.கே., கல்வி குழும செயலர் செந்தில்குமார் துவக்கிவைத்தார். கல்லூரி முதல்வர் அருணகுமாரி வரவேற்று, 2018–19ம் கல்வியாண்டின் ஆண்டறிக்கை வாசித்தார்.

புதுச்சேரி பல்கைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், இளங்கலையில் 633 மாணவிகளுக்கும், முதுகலையில் 100 மாணவிகளுக்கு பட்டம் வழங்கி பேசுகையில், 'கிராமப்புற மாணவிகள் கல்வி பெறுவதில் இக்கல்லூரியின் பங்களிப்பு அதிகம் உள்ளது. இலக்கை அடைவதில் தெளிவான பார்வை, நேரத்தை சரியாகப் பயன்படுத்தும் திறன் மாணவிகளிடம் இருக்க வேண்டும். பெண்கள் கல்வி பெறுவது சமுதாயத்தில் மாற்றத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்தும். வாழ்வில் சாதனை படைக்க, இலக்கை நிர்ணயித்துக் கொண்டு அயராது உழைக்க வேண்டும்' என்றார்.

விழாவில், கல்லூரி துணைப் பதிவாளர் சவுந்தரராஜன், தேர்வு கட்டுப்பாட்டாளர் செல்வகுமார், புல முதன்மையர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர். கல்லூரி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு முதன்மையர் உத்ரா நன்றி கூறினார்.




■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். அருகில் இஎஸ்எஸ்கே கல்வி குழும செயலர் செந்தில்குமார்.

தினமலர்–25.02.19

**READY TO EXPLORE THE WORLD**




The 19th Graduation Day ceremony was conducted in Theivanai Ammal College for Women on the 24th of February. The programme started with a prayer song followed by the college song. The dignitaries on the Dias lighted the Thiruvillakku. Mr.S.Senthil Kumar, Secretary of E.S.S.K Educational Charities declared Graduation Day open. Dr.A.V.Arunakumari, Principal of the college delivered the welcome address and introduced the Chief Guest, Prof. Gurmeet Singh,Vice-Chancellor, Pondicherry University.

The Chief Guest Prof. Gurmeet Singh,Vice-Chancellor, in his address, stated that educating women will serve for a generation and will long last forever. He asked the students to explore the world in terms of knowledge and education. The Chief Guest honoured the endowment prize winners and the graduates with the certificates. In total, 633 UG and 100 PG Graduates received the Degree certificates. Ms.C.R.Uthra,Dean of Research delivered Vote of Thanks.

THE HINDU 26.02.19

# ‘பெண்களின் சேவை வீட்டுக்கும், நாட்டுக்கும் சமமாக அமைய வேண்டும்’

விழுப்புரம், ஏப். 1: பெண்களின் சேவை வீட்டுக்கும், நாட்டுக்கும் சமமானதாக அமைய வேண்டும் என்று சொற்பொழிவாளர் சுகி.சிவம் கூறினார்.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி ஆண்டுவிழா திங்கள்கிழமை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ஏ.வி.அருணாகுமாரி வரவேற்றார். இ.எஸ். கல்விக் குழும துணைப் பதிவாளர் சௌந்தர்ராஜன் தொடக்க உரையாற்றினார். கல்லூரிச் செயலர் எஸ்.செந்தில்குமார் தலைமை உரையாற்றினார்.

சொற்பொழிவாளர் சுகிசிவம் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசியதாவது:

முந்தைய காலத்தில், பெண்களை படிக்க வைக்காமல் இருந்ததால் தான் சமூகம் பெரும் பாதிப்பைச் சந்தித்தது. ஆனால் இன்று கல்வி, வேலைவாய்ப்பு கிடைத்துள்ளன. எனினும், சம நிலை வந்துவிடவில்லை. இந்தியாவில் பெண்களின் சராசரி நிலையை கணக்கிடுவது முடியாத ஒன்றாக உள்ளது. ஒரு புறம் ஜெயலலிதா, மம்தா பானர்ஜி, மாயாவதி என பெண் சாதனையாளர்களைப் பார்க்கலாம், பல துறைகளில் முன்னேறிய பெண்கள் சிலரைப் பார்க்க முடியும். அதே நேரத்தில், அடிமை நிலையில் கடைகோடி சமுதாயத்தில் பின்தங்கியுள்ள பெண்களையும் அதிகம் பார்க்க முடியும்.

எவ்வளவு பெரிய சாதனைப் பெண்களாக இருந்தாலும், குடும்பப் பொறுப்பையும் ஏற்று வழி நடத்துவதன் மூலமே அவர்கள் நம் நாட்டில் சிறந்தவர்களாகத் திகழ முடியும். வீட்டுக்கும், நாட்டுக்கும் பெண்களின் சேவை சமமானதாக அமைய வேண்டும். அதனை எளிதாக செய்துவிட முடியாது.

இதற்கு புத்திசாலித்தனம், நிதானம், சாமர்த்தியம் பெண்களுக்கு வேண்டும். என்றார் அவர்.

இதையடுத்து, கல்விக் கண்காட்சி, நூல் வெளியீடுகள், விளையாட்டுகளில் சாதித்த மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பேராசிரியர்கள், மாணவிகள் பலர் கலந்துகொண்டனர். துணை முதல்வர் செல்வி நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டுவிழாவில் பேசுகிறார் சொற்பொழிவாளர் சுகி.சிவம்.




தினத்தந்தி 03.04.19

## விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி ஆண்டு விழா

விழுப்புரம், ஏப்.3–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் ஆண்டு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் அருணகுமாரி தலைமை தாங்கினார். இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் துணைப்பதிவாளர் சவுந்தர்ராஜன், கல்லூரி செயலாளர் எஸ்.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சொற்பொழிவாளர் சுகிசிவம் கலந்துகொண்டு பெண் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும், பெண்கள் தங்களது திறமையை வளர்த்துக் கொள்வது குறித்தும் சிறப்புரையாற்றினார். விழாவையொட்டி மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. தொடர்ந்து, மாணவிகளுக்கான பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. விழாவில் கல்லூரி மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

# தெய்வானை அம்மாள் கல்லூரி ஸ்பார்க்ஸ்—2019 ஆண்டு விழா




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில் சுகிசிவம் பேசினார்

**விழுப்புரம், ஏப்.4–**
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஸ்பார்க்ஸ்–2019 ஆண்டுவிழா நடந்தது.

கல்லூரி செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். இ.எஸ்.எஸ். கே.,கல்விக்குழு துணைப் பதிவாளர் சவுந்தரராஜன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் அருண் குமாரி வரவேற்றார். ஆன்மிக பேச்சாளர் சுகி சிவம் சிறப்புவிருந்தினராக பங்கேற்று பெண் கல்வியின் அவசியம், வளர்ச்சி, பெண்களின் எழுச்சி, சுதந்திரம், பெண் சாதனையாளர்களின் வரலாறு குறித்து பேசினார்.

தொடர்ந்து கல்வியில் சிறப்பிடம் பெற்ற இளங்கலை மூன்றாமாண்டு மாணவி பிரித்தா, முதுகலை இரண்டாமாண்டு மாணவி அஷ்வினி ஆகியோர் சான்றிதழ் மற்றும் லேப்டாப் வழங்கி கவுரவிக்கப்பட்டனர். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. கல்லூரி துணை முதல்வர் செல்வி நன்றி கூறினார்.

தினமலர்
04.04.19

# தெய்வானை அம்மாள் கல்லூரி ஸ்பார்க்ஸ்—2019 ஆண்டு விழா




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில் சுகிசிவம் பேசினார்

**விழுப்புரம், ஏப்.4–**
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஸ்பார்க்ஸ்–2019 ஆண்டுவிழா நடந்தது.

கல்லூரி செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். இ.எஸ்.எஸ். கே.,கல்விக்குழு துணைப் பதிவாளர் சவுந்தரராஜன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் அருண் குமாரி வரவேற்றார். ஆன்மிக பேச்சாளர் சுகி சிவம் சிறப்புவிருந்தினராக பங்கேற்று பெண் கல்வியின் அவசியம், வளர்ச்சி, பெண்களின் எழுச்சி, சுதந்திரம், பெண் சாதனையாளர்களின் வரலாறு குறித்து பேசினார்.

தொடர்ந்து கல்வியில் சிறப்பிடம் பெற்ற இளங்கலை மூன்றாமாண்டு மாணவி பிரித்தா, முதுகலை இரண்டாமாண்டு மாணவி அஷ்வினி ஆகியோர் சான்றிதழ் மற்றும் லேப்டாப் வழங்கி கவுரவிக்கப்பட்டனர். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. கல்லூரி துணை முதல்வர் செல்வி நன்றி கூறினார்.

தினமலர்
04.04.19

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்பு துவக்கம்

**விழுப்புரம், ஜூன் 19–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், முதலாம் ஆண்டு வகுப்பு துவக்க விழா நடந்தது.

விழாவிற்கு, இ.எஸ்., மியூசிக் அகாடமி மாணவியர்களின் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. விழாவிற்கு, கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு தலைமை தாங்கி கருத்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் அருணாகுமாரி வரவேற்றார்.

கல்லூரி செயலர் செந்தில்குமார் பங்கேற்று, கல்லூரியின் தன்னாட்சி அங்கீகாரம், சிறப்புகள், கல்வித்திறனை மாணவிகள் வளர்த்து கொள்ளும் வழிமுறைகள், எதிர்காலத்தின் வெற்றி, கல்லூரி கட்டமைப்பு குறித்து பேசினார்.

விழாவில் பாடத்திட்ட புல முதன்மையர் தேவி, விஜய் டிவி புகழ் மணிகண்டன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விழாவில், கல்லூரி மாணவிகள், பெற்றோர்கள், பேராசிரியர்கள் பங்கேற்றனர். துணை முதல்வர் செல்வி, தேர்வு கட்டுப்பாட்டாளர் செல்வகுமார் நன்றி கூறினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், முதலாமாண்டு வகுப்புகளை செயலர் செந்தில்குமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். அருகில் தாளாளர் சாமிகண்ணு.

தினமலர் – 19.06.19

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# முதலாமாண்டு மாணவிகளுக்கான வகுப்பு துவக்க விழா



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் முதலாமாண்டு மாணவிகளுக்கான வகுப்பு துவக்க விழா நடந்தது.

**விழுப்புரம், ஜூன் 22:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் முதலாமாண்டு மாணவிகளுக்கான வகுப்பு துவக்க விழா நிகழ்வில் கல்லூரியின் செயலர் செந்தில்குமார், தாளாளர் சாமிக்கண்ணு, முதல்வர் அருணகுமாரி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பிர.பல டிவி புகழ், பட்டிமன்ற பேச்சாளர் மணிகண்டன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

அதில், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியானது, பெருநகரங்களில் உள்ள கல்லூரிகளை விட, மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்கு சிறப்பான பங்களிப்பினை அளிக்கிறது என்றார். மேலும், அமெரிக்காவில் உள்ள சான் பிரான் சிஸ்கோ மைய நூலகத்தின் நுழைவு வாயிலுக்கு அடுத்ததாக, விவேகானந்தர் சிலை தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் நுழைவு வாயிலில் மட்டுமே மாணவிகளுக்கு நற்சிந்தனைகளை ஊட்டும் வகையில் நிறுவப்பட்டுள்ளதை கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

மருத்துவம், பொறியியல் படிப்புகளை விட ஐஏஸ், ஐபிஎஸ் போன்ற ஆட்சி மற்றும் நிர்வாக பணிகளை உருவாக்க கூடிய கலை மற்றும் அறிவியல் படிப்புகளின் சிறப்புத் தன்மைகளை உணர்தல், நகர்ப்புற கல்லூரிகளில் இயற்கை சூழலுடன் கூடிய சிறந்த கல்வியினை அளிக்கும் கல்லூரியாக தெய்வானை அம்மாள் கல்லூரி திகழ்தல், ஆசிரியர்களின் அறிவுரைகளின் படி நடந்து வாழ்வில் மாணவிகள் முன்னேற வேண்டும் என்றார்.

தினகரன்
22.06.19

# தெய்வானை மகளிர் கல்லூரி டிஜிட்டல் அபியான் நிகழ்ச்சி



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்சர்தா அபியான் திட்டம் நிகழ்ச்சி நடந்தது.

**விழுப்புரம், ஜூன் 28–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்சர்தா அபியான் திட்ட நிகழ்ச்சி நடந்தது.

இந்தியாவில் தேசிய மின்னணு கருவிகள் அறிவாற்றல் திட்டத்தை அறிமுகப்படுத்தி, பிரதமர் மோடி, டிஜிட்டல் இந்தியா சம்பந்தமான விழிப்புணர்வை மக்களுக்கு அளித்து வருகிறார்.

இந்த திட்டத்தில் ஒன்றான, பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்சர்தா அபியான் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டம் குறித்த நிகழ்ச்சியில், கடந்த 24ம் தேதி முதல் இன்று 28ம் தேதி வரை விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உள்ள அனைத்து மாணவிகளும், புரிதல் பெற்று, இதில் தங்களின் பெயர்களோடு, ஆதார் அடையாள எண்ணை பதிவு செய்கின்றனர்.

இந்த திட்டம் மின்னணு கருவிகளை பயன்படுத்தும் திறனை மாணவர்கள் மத்தியில் பெருக செய்கிறது.

இதில், பங்கேற்று சிறப்பாக வகுப்புகளை முடிப்போருக்கு, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது ஆகும்.

தினமலர்
28.06.19

### பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல்

# சக்ஸர்தா அபியான் திட்ட விழிப்புணர்வு முகாம்



► பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஸர்தா அபியான் திட்ட விழிப்புணர்வு முகாம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்தது.

**விழுப்புரம், ஜூன் 28:** இந்தியாவில் தேசிய மின்னணு கருவிகள் அறிவாற்றல் திட்டத்தை அறிமுகப்படுத்தி, பிரதமர் நரேந்திர மோடி, டிஜிட்டல் இந்தியா குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு அளித்து வருகிறார். இத்திட்டத்தில் ஒன்றான பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஸர்தா அபியான் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தொடர்பான நிகழ்வில் கடந்த 24ம்தேதி முதல் 28ம்தேதி வரை தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியை சேர்ந்த அனைத்து மாணவிகளும் பங்கேற்று புரிதல் பெற்று; இத்திட்டத்தில் தங்களது பெயர்களுடன், ஆதார் அடையாள எண்ணையும் பதிவு செய்து வருகின்றனர். இத்திட்டமானது மின்னணு கருவிகளை பயன்படுத்தும் திறனை மாணவர்கள் மத்தியில் பெருக செய்யும். இத்திட்டத்தில் பங்கேற்று சிறப்பாக வகுப்புகளை முடிப்பவர்களுக்கு மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தினால் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தினகரன்
28.06.19



## தெய்வானை அம்மாள் கல்லூரியில்

# உயிர் வேதியியல் துறையின் பேரவை தொடக்க விழா

விழுப்புரம், ஜூலை.7–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் துறையின் பேரவை தொடக்க விழா நடைபெற்றது. இதற்கு கல்லூரி முதல்வர் அருணகுமாரி தலைமை தாங்கினார். மாணவிகள் பேரவை தலைவி அப்ரின் பேகம் வரவேற்றார். 2019–20–ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை பேரவை செயலர் ஷீரின் வாசித்தார். இ.ஜி.எஸ். பிள்ளை கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறை உதவி பேராசிரியர் கார்த்திக் மோகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அறிவியல் உணர்வுகள் ஒரு உளவியல் அணுகுமுறை என்கிற தலைப்பில் பேசினார். மேலும் உயிர் வேதியியல் படிப்பின் முக்கியத்துவம், பயன்பாடுகள் குறித்தும் மாணவிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

இதில் உயிர்வேதியியல் துறை தலைவர் ஸ்ரீதேவி மற்றும் பேராசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் பேரவை பொருளாளர் அட்சயா நன்றி கூறினார்.

தினத்தந்தி
07.07.19

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் பேரவை துவக்கம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் துறையின் பேரவை துவக்க விழா நடந்தது.

விழுப்புரம், ஜூலை 7–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் துறையின் பேரவை துவக்க விழா நடந்தது.

விழாவிற்கு, மாணவிகள் பேரவை தலைவி அப்ரின் பேகம் வரவேற்றார். கல்லூரி முதல்வர் அருணகுமாரி அறிமுகவுரையாற்றினார். பேரவை செயலர் ஷீரின் ஆண்டறிக்கை வாசித்தார்.

இ.ஜி.எஸ்., பிள்ளை கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறை உதவி பேராசிரியர் கார்த்திக் மோகன் துவக்கவுரையாற்றினார். உயிர் வேதியியல் துறை தலைவர் ஸ்ரீதேவி உட்பட பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் பலர் கலந்து கொண்டனர். பேரவைப் பொருளாளர் அட்சயா நன்றி கூறினார்.

தினகரன்
07.07.19

## விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் ஸ்பிகா கிளப் சங்கம் தொடக்கம்



► விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த ஸ்பிகா கிளப் சங்க தொடக்க விழாவில் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

**விழுப்புரம், ஜூலை 9:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி இயற்பியல் துறையில் ஸ்பிகா கிளப் சங்க தொடக்க விழா நடந்தது. சிறப்பு விருந்தினராக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக உதவி பேராசிரியர் சபரி கிரிசன் கலந்துகொண்டு பேசினார். சங்க தலைவர் திவ்யலட்சுமி வரவேற்றார். சங்க துணை தலைவர் அபிேனஸ்வரி சங்கத்தின் ஆண்டு திட்டத்தை வழங்கினார். ,இதில் இத்துறையின் நோக்கம், பயன்பாடுகள் மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றி மாணவியர்களுக்கு விளக்கப்பட்டது. விழாவில் இயற்பியல் துறையின் 227 மாணவியர்களும் மற்றும் 10 உதவி பேராசிரியர்களும் பங்கேற்று பயன்பெற்றனர். சங்க செயலாளர் ஜனனி நன்றி கூறினார்.

தினகரன்
09.07.19

# விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பாவேந்தர் பேரவை துவக்கம்

விழுப்புரம், ஜூலை 15–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பாவேந்தர் பேரவை துவக்க விழா நடைபெற்றது.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் (தன்னாட்சி) தமிழாய்வுத்துறை சார்பில் பாவேந்தர் பேரவையின் துவக்க விழா நடைபெற்றது. இளங்கலைத்தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவி ஏ.ஆதிலட்சுமி வரவேற்புரை வழங்க மாணவி எஸ். சுபாஷினி ஆண்டறிக்கையினை வாசித்தார். தமிழாய்வுத்துறைத் தலைவர் மு. மங்கையர்க்கரசி நோக்கவுரை ஆற்றினார்.

கல்லூரியின் முதல்வர் ஏ.வி. அருணகுமாரி கருத்துரையாற்றினார். இவ்வுரையில் மாணவியர்கள் சான்றோர்களின் சொற்படி நடக்க வேண்டிய முறை, தேசத்தின் வளர்ச்சிக்கு மாணவியர்களின் பங்கு, நவீன வாழ்வியல் முறையில் திருக்குறள் வாசிப்பின் தேவை, பாடத்திட்டத்தினைத் தாண்டி புத்தகங்களை வாசிக்க வேண்டியதின் அவசியம் முற்றும் இராமாயணம் போன்ற நமது தொன்மையான காப்பியங்களை மாணவியர்கள் அறிந்து கொள்ளலின் அவசியம் குறித்து விளக்கிப் பேசினார்.

முதுகலை இரண்டாமாண்டு மாணவி ஆர்.காயத்ரி .சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் ஏகாம்பரம் "பாரதிதாசன் படைப்புகளில் தமிழ் மொழி" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். முதுகலைத்தமிழ் முதலாம் ஆண்டு மாணவி எஸ். ஜோதிப்பிரியா நன்றி கூறினார்.

மக்கள் குரல் – 18.07.19

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் பாவேந்தர் பேரவை துவக்க விழா

**விழுப்புரம், ஜூலை 19–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தமிழ் ஆய்வுத்துறை சார்பில் பாவேந்தர் பேரவை துவக்க விழா நடந்தது.

விழாவிற்கு, இளங்கலைத்தமிழ் மூன்றாம் ஆண்டு மாணவி ஆதிலட்சுமி வரவேற்றார். மாணவி சுபாஷினி ஆண்டறிக்கை வாசித்தார். தமிழ் ஆய்வுத் துறை தலைவர் மங்கையர்கரசி நோக்கவுரை ஆற்றினார்.

கல்லூரி முதல்வர் அருணகுமாரி கருத்துரை வழங்கினார். முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி காயத்ரி சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். சென்னை பல்கலைக்கழக தமிழ் துறை இணைப்பேராசிரியர் ஏகாம்பரம் சிறப்புரையாற்றினார். இதில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த பாவேந்தர் பேரவை துவக்க விழாவில், சென்னை பல்கலைக்கழக தமிழ் துறை இணைப்பேராசிரியர் ஏகாம்பரம் பேசினார்.

தினமலர் – 19.07.19

# புத்தாக்க பயிற்சி முகாம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லுாரியில் நடந்த அரசு பள்ளி மாணவர்களுக்கான புத்தாக்க பயிற்சியில் சி.இ.ஓ., முனுசாமி பேசினார்.

**விழுப்புரம், ஜூலை 20–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லுாரியில் அரசு பள்ளி பிளஸ் 2 மாணவர்களுக்கான புத்தாக்க பயிற்சி நடந்தது.

முகாமில், விழுப்புரம் சி.இ.ஓ., முனுசாமி சிறப்புரையாற்றினார். உயர் கல்விக்கான வழிகாட்டுதல்கள், மாணவர்கள் வளர் இளம் பருவ பிரச்னைகளை எதிர் கொள்ளும் முறை, நெருக்கடியான தருணங்களில் முடிவெடுக்கும் திறன் மற்றும் இன்றைய தொழில்நுட்ப உலகத்தில் கல்வியின் முக்கியத்துவம் ஆகியவை குறித்து அறிவுரை வழங்கப்பட்டது.

முகாமில், மாவட்டத்தைச் சேர்ந்த அரசு பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.

20.07.19 – தினமலர்

# மகளிர் கல்லூரியில் பேரவை துவக்கம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆங்கில துறையின் காபி ஹவுஸ் பேரவை துவக்க விழா நடந்தது.

**விழுப்புரம், ஜூலை 25–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆங்கிலத் துறையின் காபி ஹவுஸ் பேரவை துவக்க விழா நடந்தது.

மாணவிகள் பேரவை தலைவி தீபிகா வரவேற்றார். பேரவைச்செயலர் அபிதா ஆண்டறிக்கை வாசித்தார்.

திருச்சி புனித வளவனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆங்கிலத் துறை உதவி பேராசிரியர் ஜெயபால் சிறப்புரையாற்றினார்.

ஆங்கில துறைத் தலைவர், பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் பங்கேற்றனர். முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி சுவர்ண முகி நன்றி கூறினார்.

தினமலர்
25.07.19



## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# வேலைவாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

விழுப்புரம், ஜூலை.25–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பயிற்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் சார்பில் பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு கல்லூரி முதல்வர் அருணகுமாரி தலைமை தாங்கினார். மாணவிகள் புல முதன்மையர் ராஜேஸ்வரி வரவேற்றார். இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் துணைப்பதிவாளர் சவுந்தர்ராஜன் கலந்துகொண்டு பெண்களுக்கான வேலைவாய்ப்புகள், தொழில் முனைவோரின் முக்கியத்துவம் குறித்து விளக்கி பேசினார். சிறப்பு விருந்தினராக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குனர் பிரபாவதி கலந்துகொண்டு பெண்கள், அரசு வேலைவாய்ப்புகளை பெறும் எளிய வழிமுறைகள், அரசுத்தேர்வுகளை எதிர்கொள்ளும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

இதில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் வேல்முருகன், பயிற்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரீத்தி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர்.

தினத்தந்தி
25.07.19

மகளிர் கல்
போவை க

தினத்தந்தி
25.07.19

தினமலர்
28.07.19

# மகளிர் கல்லூரியில் பேரவை துவக்க விழா

**விழுப்புரம், ஜூலை 28–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கணினி அறிவியல் துறை சார்பில் பேரவை தொடக்க விழா நடந்தது.

கல்லூரி முதல்வர் அருணாகுமாரி தலைமை தாங்கினார்.

பேரவைத் தலைவி ஐஸ்வர்யா வரவேற்றார். செயலர் ஹஜீராபானு ஆண்டறிக்கை வாசித்தார்.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி கணினி அறிவியல் துறை பேராசிரியர் விமல் ஜெரால்டு சிறப்புரையாற்றினார். துணை தலைவி ஐஸ்வர்யா நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கணினி அறிவியல் துறை சார்பில் பேரவைத் தொடக்க விழா நடந்தது.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, மும்பை ஐ.ஐ.பி.எஸ். நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டபோது எடுத்த படம்.

**மும்பை நிறுவனத்துடன்**

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்

விழுப்புரம், ஆக.7– மும்பை நிறுவனத்துடன் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வங்கி மற்றும் நிதிக்கான இந்திய நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வங்கி மற்றும் நிதிக்கான இந்திய நிறுவனத்தினுடைய முதன்மை நிர்வாக அதிகாரி மிஸ்ரா, செயல் இயக்குனர் பிரான்சிஸ் அமலநாதன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினர்.

## முதல் முறையாக

அப்போது அகில இந்திய வங்கி சம்மேளனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பாடமாக திகழும் பட்டயப்படிப்பு, விழுப்புரம் மாவட்டத்தில் முதல் முறையாக இக்கல்லூரியில் தான் தொடங்கப்பட்டுள்ளது என்றனர். மேலும் வங்கி பணி வாய்ப்புகளில் இந்த பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு வழங்கும் முன்னுரிமைகள், வங்கி பணிகளில் கிடைக்கும் ஊதிய உயர்வு நிலைகள் ஆகியவை குறித்து தெளிவுப்படுத்தியதோடு இக்கல்லூரியில் வணிகவியல் படிக்கும் மாணவிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி எதிர்காலத்தில் வங்கி தொடர்புடைய பணிகளில் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்தினர். நிகழ்ச்சியின் இறுதியாக வங்கி மற்றும் நிதிக்கான இந்திய நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அதிகாரி மிஸ்ரா, இ.எஸ்.எஸ்.கே. கல்விக்குழுமத்தின் துணைப்பதிவாளர் சவுந்தர்ராஜன் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தினத்தந்தி
07.08.19

MPhil Admission
Limited seats available in
Tamil, Physics & Commerce
THEIVANAI AMMAL COLLEGE FOR WOMEN
(AUTONOMOUS) - Villupuram
Contact Immediately - 04146 - 259674

தினமலர்
15.08.19

வங்கி, நிதிக்கான இந்திய நிறுவனத்துடன்

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்



▶ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், வங்கி மற்றும் நிதிக்கான இந்திய நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் நிகழ்ச்சி நடந்தது.

விழுப்புரம், ஆக. 8: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் (தன்னாட்சி) வங்கி மற்றும் நிதிக்கான இந்திய நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் நிகழ்வு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்களாக வங்கி மற்றும் நிதிக்கான இந்திய நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அதிகாரி முனைவர் ஜெ.என். மிஸ்ரா, செயல் இயக்குனர் பிரான்ஸிஸ் அமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

அவர் பேசுகையில், அகில இந்திய வங்கி சம்மேளனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பாடமாக திகழும் பட்டயப்படிப்பு, விழுப்புரம் மாவட்டத்தில் முதல்முறையாக இக்கல்லூரியில் துவக்கப்பட்டுள்ளது என்றார். மேலும், வங்கி பணி வாய்ப்புகளில் இப்பட்டயப்படிப்பு படித்தவர்களுக்கு வழங்கப்படும் முன்னுரிமைகள், ஊதிய உயர்வு நிலைகள் குறித்து விளக்கினார். வங்கி மற்றும் நிதிக்கான இந்திய நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அதிகாரி ஜெ.என். மிஸ்ரா, இஎஸ்எஸ்கே கல்வி குழுமத்தின் துணை பதிவாளர் சவுந்தரராஜன் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தினகரன் - 08.08.19

# வணிகவியல் ஆய்வுத்துறை கருத்தரங்கம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகவியல் ஆய்வுத்துறையின் சார்பில் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

விழுப்புரம், ஆக. 13: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகவியல் ஆய்வுத்துறையின் சார்பில் தேசியக் கருத்தரங்கம் நடந்தது. இந்நிகழ்ச்சியில் வரவேற்புரை மற்றும் சிறப்பு விருந்தினர் அறிமுக உரையினை வணிகவியல் ஆய்வுத்துறையின் துறைத்தலைவர் முனைவர் செல்வக்குமார் வழங்கினார். இஎஸ்எஸ்கே கல்விக்குழும துணைப்பதிவாளர் முனைவர் சவுந்தரராஜன் நோக்கவுரையாற்றினார். தலைமையுரையினை கல்லூரி செயலாளர் செந்தில்குமார் வழங்கினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கேரள பல்கலைக்கழகத்தின் வணிகவியல் துறையின் துறைத்தலைவர் முனைவர் ராஜூ சிறப்புரையாற்றினார். இந்த தேசியக்கருத்தரங்கில் பல்வேறு பல்கலை மற்றும் கல்லூரிகளிலிருந்து வருகை புரிந்த ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் மூன்று அமர்வுகளில் வாசிக்கப்பட்டது. சிறந்த ஆய்வுக்கட்டுரைகளுக்கான பரிசுகள் மற்றும் இத்தேசியக்கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு சான்றோர் பெருமக்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. வணிகவியல் ஆய்வுத்துறையின் பேராசிரியர் ஆனந்தி நன்றியுரை வழங்கினார்.

தினகரன்
13.08.19

# சுதந்திர தின விழா



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் சுதந்திர தின விழாவையொட்டி, மாணவிகளின் அணிவகுப்பு நிகழ்ச்சி நடந்தது.

**விழுப்புரம், ஆக. 18–**


விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் முதல்வர் அருணகுமாரி தலைமை தாங்கினார். மாணவியர் பேரவை தலைவி ஹரிணி வரவேற்றார். தேசிய மாணவர் படை மாணவிகளின் அணிவகுப்பு நிகழ்ச்சி நடந்தது. இ.எஸ்., கல்விக்குழுமம் துணைப் பதிவாளர் சவுந்தர ராஜன், தேசிய கொடியேற்றி சிறப்புரையாற்றினார். துறை தலைவர்கள், பேராசிரியைகள் பலர் கலந்து கொண்டனர். பேரவை துணை தலைவி பெனிடா நன்றி கூறினார்.

தினமலர் 18.08.19

www.dinamalar.com
புதுச்சேரி
• வியாழன் • ஆகஸ்ட் 22 2019
தினமலர் விழுப்புரம்

# மகளிர் கல்லூரியில் கல்வி புத்தாக்க நிகழ்வு




■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், மூன்றாமாண்டு இளங்கலை மாணவிகளின் மதிப்பீட்டு கல்விக்கான புத்தாக்க நிகழ்வு நடந்தது.

**விழுப்புரம், ஆக. 22–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், மூன்றாமாண்டு இளங்கலை மாணவிகளின் மதிப்பீட்டு கல்விக்கான புத்தாக்க நிகழ்வு நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் அருணகுமாரி தலைமை தாங்கினார். கல்விப்புல முதன்மையர் அகிலா வரவேற்றார்.

வழக்கறிஞர் ஜெயஜோதி, 'பெண்களின் உரிமைகள்' தலைப்பில், பெண்களுக்கான அடிப்படை உரிமை சட்டங்கள், கலாசாரம், கல்வியியல் மதிப்பீடு, வன்கொடுமைகளை எதிர்த்து தற்காத்துக் கொள்ளக் கூடிய சட்டங்கள் பற்றி சிறப்புரையாற்றினார்.

இதில், 250 மாணவிகள், உதவி பேராசிரியர்கள் பலர் பங்கேற்றனர். கணிதத்துறை பேராசிரியை சாந்தலட்சுமி நன்றி கூறினார்.

தினமலர் -22·08·19

# தெய்வானை அம்மாள் கல்லூரி ரோட்ராக்ட் சங்கம் பதவியேற்பு




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், ரோட்டரி சங்கம் சார்பில் ரோட்ராக்ட் சங்க நிர்வாகிகள் பதவியேற்பு விழா நடந்தது.

**விழுப்புரம், ஆக. 20–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், ரோட்டரி சங்கம் சார்பில் ரோட்ராக்ட் சங்க நிர்வாகிகள் பதவியேற்பு விழா நடந்தது.

கல்லூரி வளாகத்தில் நடந்த விழாவிற்கு, ரோட்டரி சங்கதலைவர் பாலகுருநாதன் தலைமைதாங்கினார். துணை ஆளுநர் காங்கேயன், பொருளாளர் நம்மாழ்வார், பட்டிமன்ற பேச்சாளர் சங்கரன், சங்கர் முன்னிலை வகித்தனர்.

ஆங்கில துறை மாணவி சோபியா மெகாகோ தலைவராகவும், தமிழ்த்துறை மாணவி பிரனிதா துணைத் தலைவராகவும், இயற்பியல் துறை மாணவி துர்கா தேவி பொருளாளராகவும் பதவியேற்றனர். கல்லூரி செயலர் செந்தில்குமார், மண்டல உறுப்பினர் ஜெயவேல் சிறப்புரையாற்றினர்.

அப்போது, ரோட்டரி நிர்வாகிகள் ஆறுமுகம், ரகுநாதன், சுரேஷ், முரளிதரன், சிதம்பரநாதன், விஸ்வநாதன், குமார், தீபக்கண்ணன், சேதுராமன், சாய்ராம் உட்பட பலர் கலந்து கொண்டனர். ரோட்டரி செயலர் காசி விஸ்வநாதன் நன்றி கூறினார்.

தினமலர் 20.08.19

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் உயிர் வேதியியல் பன்னாட்டு கருத்தரங்கு

**விழுப்புரம், செப்.7–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், உயிர் வேதியியல் துறை சார்பில் பன்னாட்டு கருத்தரங்கு நடந்தது.

கல்லூரி அரங்கில் நடந்த நிகழ்ச்சிக்கு, இ.எஸ்., எம்.கே. கல்வி குழும செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

துறை தலைவர் பேராசிரியை ஸ்ரீதேவி வரவேற்றார். கல்லூரி முதல்வர் அருணாகுமாரி, விளக்கவுரை ஆற்றினார். கல்விக் குழும துணை பதிவாளர் சவுந்தர்ராஜன் சிறப்புரை ஆற்றினார்.

தைவான் நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியை பென் செங்க், டயாப்படிஸ் நோய் குணப்படுத்துவதற்கான ஆய்வு குறித்து விளக்கினார்.

தொடர்ந்து, உயிர் வேதியியல் துறையினருக்கு, தொழிற் துறையில் உள்ள எதிர்கால வேலைவாய்ப்பு மற்றும் தகுதி மேம்பாடு குறித்து, பெங்களூரு தனியார் நிறுவன இயக்குநர் விஜய் முப்பலா விளக்கவுரை நிகழ்த்தினார்.

வேலூர் திருவள்ளுவர் பல்கலைக் கழக உயிர் வேதியியல் துறை பேராசிரியர் பாபு ஜனார்த்தனம் சிறப்புரை ஆற்றினார்.

உதவி பேராசிரியை அகிலா நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், உயிர் வேதியியல்துறை சார்பில் நடந்த பன்னாட்டு கருத்தரங்கில், தைவான் நாட்டைச் சேர்ந்த பேராசிரியை பென் சங்க் கலந்து கொண்டார்.

தினமலர் 27.09.19

தினமணி 7/9/2019

# மாணவர்களுக்கு தொழில் சார்ந்த செய்முறைக் கல்வி அவசியம்

## தேசிய கருத்தரங்கில் அறிவுரை



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் உயிரி வேதியியல் தொடர்பான புத்தகத்தை வெளியிடுகிறார் தைவான் நாட்டைச் சேர்ந்த பேராசிரியை ஐபென்செங்(வலமிருந்து 3-ஆவது). உடன் கருத்தரங்கில் பங்கேற்ற பெங்களூரைச் சேர்ந்த விஜய் முப்பாலா உள்ளிட்டோர்.

விழுப்புரம், செப். 6: கல்லூரியில் பயிலும்போதே தொழில்சார்ந்த செய்முறைக் கல்வியை வழங்குவதுதான் மாணவர்களின் எதிர்கால முன்னேற்றத்துக்கு வழிகாட்டியாக அமையும் என தேசியக் கருத்தரங்கில் பங்கேற்ற ஆராய்ச்சி பேராசிரியர்கள் அறிவுறுத்தினர்.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிரி வேதியியல் துறை சார்பில் தேசிய அளவிலான ஆராய்ச்சி கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. துறைத் தலைவர் பி.ஸ்ரீதேவி வரவேற்றார். கல்லூரி முதல்வர் ஏ.வி. அருணாகுமாரி, இ.எஸ். கல்விக்குழும துணைப் பதிவாளர் இ.சௌந்திரராஜன், செயலர் எஸ். செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தைவான் நாட்டைச் சேர்ந்த உயிரி ஆராய்ச்சி மைய பேராசிரியை டாக்டர் ஐபென்செங் பங்கேற்று சர்க்கரை நோய் தடுப்பு மருத்துவ ஆராய்ச்சிக்கான ஸ்டெம் செல் பயன்பாடு குறித்தும், பெங்களூருவைச் சேர்ந்த தனியார் தொழில் நிறுவன இயக்குநர் விஜய் முப்பாலா, கல்லூரிகளில் தொழில் சார்ந்த செய்முறை கல்வியை அளித்து மாணவர்களை மேம்படுத்துவது தொடர்பாகவும், வேலூர் திருவள்ளுவர் பல்கலை. பேராசிரியர் ஆர்.பாபு ஜனார்த்தனம் உயிரிவேதியியலின் சிறப்பான எதிர்காலம் குறித்தும் சிறப்புரையாற்றினர். 17 கல்லூரிகளைச் சேர்ந்த 125 ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற பெங்களூரு தனியார் தொழில் நிறுவன இயக்குநர் விஜய்முப்பாலா செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் பட்டப் படிப்பு முடிக்கும் மாணவர்கள் துறை சார்ந்த தொழில் தொடர்பான திறனின்றி உள்ளனர். இதனால், பல்வேறு நிறுவன வேலைவாய்ப்புகளைப் பெறுவதில் தயக்கம் உள்ளது.

பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு தொழில் சார்ந்த அறிவை வழங்கவும், உற்பத்தி தொடர்பான சிந்தனையைத் தூண்டும் விதத்தில் புதிய நடைமுறையை செயல்படுத்தவும் வேண்டும்.

இதற்கான நடவடிக்கையை இந்தக் கல்லூரி வாயிலாக நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

நமது நாடு தொழில் துறையில் முன்னேற்றத்தை நோக்கிச் செல்கிறது. தொழில் நிறுவனங்களுக்கு ஏற்ற இளைஞர்கள், திறனின்றியே உள்ளனர்.

இதனால், கல்லூரி படிப்புக்கும், தொழில் துறைக்கும் நீண்ட இடைவெளி உள்ளது. இனி கல்லூரிகளில், தொழில் நிறுவனங்களின் உற்பத்தி சார்ந்த கற்றலும் இடம் பெற வேண்டும். இதனால், இளைஞர்கள் வேலைவாய்ப்பை பெறவும், புதிய உற்பத்திகள் ஏற்படவும், நிறுவனங்களுக்கு ஏற்ற பணியாளர்கள் கிடைக்கவும் வாய்ப்பு உருவாகும்.

இதன் முன்னோட்டமாக, கல்லூரிகளில் சேவை நோக்கத்தில் உயிரி, உணவுத் தொழில்நுட்பங்கள் தொடர்பான தொழில் திறனை இணைந்து நாங்கள் மேற்கொள்ளவுள்ளோம் என்றார்.

தொடர்ந்து பேசிய தைவான் நாட்டு ஆராய்ச்சியாளர் ஐ பென் ஜெங், உலகளாவிய வாய்ப்புகளை பெறும்வகையில், இளமையிலேயே தொழில்சார்ந்த கல்வியை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். எதிர்கால மருத்துவத் துறையில் ஸ்டெம் செல் தொடர்பான ஆராய்ச்சி சிறப்பானதாக அமையும். இது குறித்த புரிதலையும் மாணவர்களிடம் வழங்குகிறோம் என்றார்.

இந்து - தமிழ் 9.9.2019



▶▶ விழுப்புரத்தில் உள்ள தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் மாணவிகளுக்கான கருத்தரங்கம் நடைபெற்றது.

# தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் கருத்தரங்கம்

■ விழுப்புரம்

விழுப்புரத்தில் உள்ள தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் மாணவிகளுக்கான கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது. பேராசிரியை ஸ்ரீதேவி வரவேற்றார். இ.எஸ் கல்விக் குழும செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

கல்லூரி முதல்வர் அருணா குமாரி, இ.எஸ். கல்விக் குழுமத்தின் துணைப்பதிவாளர் சௌந்திரராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கருத்தரங்கில் தைவான் நாட்டைச் சேர்ந்த பேராசிரியை முனைவர் ஃபென் ச்செங்க், பெங்களூரைச் சேர்ந்த முனைவர் விஜய் முப்பல்லா ஆகியோர் இணைந்து கூறியது:

சிலபஸில் உள்ள பாடங்களை மட்டும் படித்து தேர்ச்சி பெற்றால் இந்த அவசர உலகில் தகுதியாக வேலை கிடைப்பது சிரமம். அதனால் மாணவர்களின் தனித் திறன்களை கண்டறிய வேண்டும்.

அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பணிகள் இங்கு குவிந்து கிடக்கின்றன. ஆனால் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் தகுதியோடு பணியாளர்கள் கிடைப்பதில்லை. வித்தியாசமான சிந்தனை அதனை செயல்படுத்தும் முறைகளே ஒருவரை வெற்றியாளராக்குகிறது.

உதாரணமாக ஒருவருக்கு உடல் நிலை சரியில்லை என்றால் அந்த நோய்க்கான 5 மருந்துகளை மருத்துவர் சிபாரிசு செய்வார்.

அந்த மருந்தில் நோயாளியின் உடல்வாகிற்கு ஒரு மருந்து குணப்படுத்தும் என்பது மருத்துவருக்கு தெரியும். ஆனால் தற்போது ஒவ்வொருவரின் திசுவை எடுத்து ஆராய்ச்சி செய்து அவருக்கு எந்த மருந்தினால் நோய் குணமாகும் என்ற கண்டுபிடிப்புகள் நடைபெற்று வருகிறது.

மாணவர்களுக்கு பாடங்களை கடந்து அவர்களின் திறமைகளை கண்டறிந்து அதனை ஊக்குவிக்க இதுபோன்ற கருத்தரங்குகள் அவசியமாகின்றன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், இயற்பியல் துறை சார்பில் காணொளி காட்சி கருத்தரங்கம் நடந்தது.

## கருத்தரங்கம்


**விழுப்புரம், செப். 14–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், இயற்பியல் துறை சார்பில் காணொளி காட்சி கருத்தரங்கம் நடந்தது.

உதவி பேராசிரியை சுதா வரவேற்றார். ஜப்பான் அகிடா பல்கலைக்கழக முதுகலை பொறியியல் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி மைய போஸ்ட் டாக்ட்ரோல் ஆராய்ச்சியாளர் லாரல் சிமோன் லோபோ, அடுத்த தலைமுறையின் ஆற்றல் சேமிப்பு பொருட்களின் புதுமைகள் என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்.

இயற்பியல் துறை மாணவிகள் 237 பேர் மற்றும் 10 உதவி பேராசிரியர்கள் பங்கேற்றனர். உதவி பேராசிரியர் முத்துராஜா நன்றி கூறினார்.

தினமலர் - 14.09.19

# மகளிர் கல்லூரியில் 2ம் பருவ வகுப்பு துவக்க விழா



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இரண்டாம் பருவ துவக்க விழாவில் பங்கேற்ற, சென்னை கிறிஸ்தவ கல்லூரி முன்னாள் பேராசிரியர் மற்றும் தெற்கு ஆசிய நிகழ்வுகளின் இயக்குனர் ஸ்பெர்ஜியனை, கல்லூரி நிர்வாகிகள் வரவேற்றனர்.

**விழுப்புரம், நவ. 22–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இரண்டாம் பருவ துவக்க விழா நடந்தது.

நிகழ்ச்சியில், சென்னை கிறிஸ்தவ கல்லூரி முன்னாள் பேராசிரியர் மற்றும் தெற்கு ஆசிய நிகழ்வுகளின் இயக்குனர் ஸ்பெர்ஜியன் தலைமை தாங்கி, பேசுகையில், 'கல்லூரி பருவ கற்றலின் அவசியம், இன்றைய இயந்திர மயமான உலகில் சமூகத்தோடு, இணக்கமாக வாழ வேண்டியதன் தேவைகள், மாணவிகள் பிறரை புரிந்து கொள்ளுதலின் இன்றியமையாமை, விருப்பு வெறுப்பின்றி அன்பு செலுத்த வேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பை மாணவிகள் வளர்த்து கொண்டு, விடா முயற்சியோடு போராடி எதிர்கால வாழ்வில் வெற்றி பெற வேண்டும்' என்றார்.

கல்லூரி துணை முதல்வர் செல்வி உட்பட துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

தினமலர் 22/11/19

# தெய்வானை மகளிர் கல்லூரியில் ஆட்சி மன்றக்குழுக் கூட்டம்



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆட்சிமன்ற குழு கூட்டம் நடைபெற்றது.

**விழுப்புரம், நவ. 29–** விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆட்சிமன்ற குழுக் கூட்டம் நடந்தது.

கல்லூரி முதல்வர் அருணாகுமாரி வரவேற்றார். சென்னை பல்கலைக்கழகத்தின் உயிர்வேதியியல் துறை முன்னாள் துறைத் தலைவர் நிரஞ்சலிதேவி, கல்லூரிக்கல்வி வட்டார இணை இயக்குனர் எழிலன், திருவள்ளுவர் பல்கலைக்கழக வேதியியல் துறைத் தலைவர் சையத் சபி, திருச்சி பி.ஐ.எம்., இணை பேராசிரியர் ஜெயகிருஷ்ணா ஆகியோர் ஆட்சி மன்றக்குழுவில் பங்கேற்றனர்.

கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு, செயலர் செந்தில்குமார் கல்லூரிக்கு தேசிய தரச்சான்று அங்கீகாரம் பெறவும், டி.எஸ்.டி., பிஸ்ட் ஆய்வகத்தை நிறுவுதல் மற்றும் மாணவிகளுக்கு உலகளாவிய கல்வியை ஊக்குவித்தில் ஆகியவற்றிற்கு பேராசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினரின் பங்களிப்புகள் குறித்து பேசின்ர்.

இ.எஸ்., கல்விக்குழும பதிவாளர் சவுந்தரராஜன், கல்லூரியின் சிறப்புகள் குறித்து பேசினார். முதல்வர் அருணகுமாரி, கல்லூரியில் துவங்கியுள்ள புதிய பாடப்பிரிவுகள், புத்தாக்க செயல்பாடுகள், பேராசிரியர் பணியமர்த்த விதிகள் ஆகியவற்றிற்கான முன்மொழிவுகளைவிவரித்தார்.

மாணவிகளுக்கு வேலைவாய்ப்புகளை பெற்று தருதல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல், சிறப்பான தன்னாட்சி தொடர்பாக ஆட்சி மன்றக்குழுவினர் தங்களின் ஆலோசனைகளை வழங்கினர்.

தினமலர் 29.11.19

தினமலர் - 08.12.2019



■ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த 'ஸ்பார்க் இசட் 2020' நிகழ்ச்சியில், நடிகர் ஹரிஷ் கல்யாண் ஆண்டு இதழை வெளியிட்டார். அருகில், கல்லூரி செயலர் செந்தில்குமார்.



### விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில்

# 867 மாணவிகளுக்கு பட்டம்

## மயில்சாமி அண்ணாதுரை வழங்கினார்

விழுப்புரம், டிச.9-
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 20-ம் ஆண்டு பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரியின் செயலாளர் எஸ்.செந்தில்குமார் தலைமை தாங்கினார். இ.எஸ் கல்விக்குழும தலைவரும், கல்வியாளருமான சாமிக்கண்ணு முன்னிலை வகித்தார். கல்லூரியின் முதல்வர் அருணாகுமாரி ஆண்டறிக்கையை வாசித்ததோடு, அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன (இஸ்ரோ) முன்னாள் இயக்குனரும், தேசிய திட்டவளர் மற்றும் ஆராய்ச்சி அமைப்பின் தலைவருமான மயில்சாமி அண்ணாதுரை கலந்து கொண்டு 867 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசினார்.

அப்போது அவர் பேசுகையில், பட்டம் பெறுவது மாணவிகளின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான மைல்கல். நீங்கள் பட்டம் பெறும் காட்சி புகைப்படமாக உங்களது வீடுகளில் தொங்கும். நான் ஓய்வு பெற்று கடந்த 14 மாதங்களில் ஜெய்ப்பூரில் தொடங்கி இன்று விழுப்புரம் வரை கிட்டதட்ட ஒரு லட்சம் கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து இரண்டு லட்சம் மாணவ, மாணவிகளை சந்தித்து தன்னம்பிக்கை குறித்து பேசியுள்ளேன். இந்திய அளவில் உயர் கல்வி படிப்போரின் எண்ணிக்கை 24 சதவீதம். ஆனால் தமிழகத்தில் மட்டும் உயர் கல்வி படிப்போரின் சதவீதம் 48 சதவீதம் ஆகும். ஐரோப்பிய நாடுகளில் கூட உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை குறைவாகதான் உள்ளது. தமிழகத்தில் இந்த சதவீதம் வருங்காலத்தில் 80 சதவீதமாக உயரவேண்டும். செயற்கைகோள் மூலம் 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு பிறகு விண்ணுக்கு மனிதர்களை அனுப்ப இஸ்ரோ நடவடிக்கை எடுக்கலாம். செயற்கைகோள் மூலம் மழை முன்கூட்டியே பெய்யும் நாட்கள், தடுப்பணைகள் எங்கு கட்டலாம், நீர்மேலாண்மை ஆகியவை குறித்து கண்டறிந்துள்ளோம். இவ்வாறு அவர் பேசினார். இதில் கல்லூரி பதிவாளர் சவுந்தர்ராஜன், தேர்வு கட்டுப்பாட்டாளர் ஸ்ரீதேவி மற்றும் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள், பெற்றோர்கள் உள்பட கலந்துகொண்டனர்.

தினத்தந்தி 09.12.19

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் 867 மாணவிகளுக்கு பட்டமளிப்பு




விழாவில் மாணவிக்கு பட்டமளிக்கும் இஸ்ரோ முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை. உடன் கல்லூரிப் பதிவாளர் சௌந்தரராஜன், செயலர் செந்தில்குமார், தாளாளர் இ.சாமிக்கண்ணு, முதல்வர் அருணாகுமாரி.

**விழுப்புரம், டிச. 8:** விழுப்புரம் தெய்வானை அம்மாள் கலைக் கல்லூரியில் பயின்ற 867 மாணவிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை பட்டங்கள் வழங்கப்பட்டன.

விழுப்புரம் – திருச்சி சாலையில் உள்ள தெய்வானை அம்மாள் மகளிர் கலைக் கல்லூரியின் 20–ஆவது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இ.எஸ்.எஸ்.கே. கல்விக் குழுமத்தின் செயலர் எஸ்.செந்தில்குமார் விழாவைத் தொடக்கிவைத்தார். கல்லூரி முதல்வர் அருணாகுமார் வரவேற்றார். விழாவில், இஸ்ரோ முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை கலந்து கொண்டு 867 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பாராட்டிப் பேசினார். மேலும், பல்வேறு பாடங்களில் முதலிடம் பெற்ற மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

கல்லூரித் தாளாளர் இ.சாமிக்கண்ணு, பதிவாளர் சௌந்தரராஜன், தேர்வுக் கட்டுப்பாட்டாளர் தேவி, புல முதல்வர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகளின் பெற்றோர்கள் உள்பட திரளானோர் கலந்து கொண்டனர்.

தினமணி - 09.12.19

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் 20வது பட்டமளிப்பு விழா




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் இஸ்ரோ முன்னாள் இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை மாணவிகளுக்கு பட்டம் வழங்கி பாராட்டினார். அருகில் கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு, செயலர் செந்தில்குமார்.

**விழுப்புரம், டிச. 9–**

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், 20வது பட்டமளிப்பு விழா நடந்தது.

விழாவிற்கு, இ.எஸ்.எஸ்.கே., கல்விக்குழும செயலர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் அருணகுமாரி வரவேற்றார். கல்லூரி பதிவாளர் சவுந்தர்ராஜன், தேர்வு கட்டுப்பாட்டாளர் ஸ்ரீதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு வாழ்த்துரை வழங்கினார். இஸ்ரோ முன்னாள் இயக்குநரும், தேசிய திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி அமைப்பு தலைவர் மயில்சாமி அண்ணாதுரை கலந்து கொண்டு, இளங்கலை மாணவிகள் 726 பேர், முதுகலை மாணவிகள் 126 பேர் மற்றும் இளமுனைவர் ஆய்வு மாணவிகள் 15 பேருக்கு பட்டங்கள் வழங்கி பாராட்டினார்.

அப்போது, பேராசிரியர்கள், மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். கல்லூரி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி பிரிவு முதன்மையர் உத்ரா நன்றி கூறினார்.

முன்னதாக, இஸ்ரோ முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை நிருபர்களிடம் கூறியதாவது;

தமிழகத்தில் அறிவியல் தொழில்நுட்ப மன்றம் சார்பில் அறிவியல் சார்ந்த 18 திட்டங்கள் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு செயல்படுத்தப்படவுள்ளது. மாணவர்களுக்கு கல்வி கற்பது மற்றும் ஆசிரியர்கள், பேராசிரியர்களுக்கு கல்வி கற்பிப்பதில் அறிவியல் இருக்க வேண்டும் என திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து துறைகளிலும் அறிவியல் வளர்ச்சி இருக்க வேண்டும். மாணவர்களுக்கு அறிவியல் பயிற்சி கொடுத்து, அவர்களின் கண்டுபிடிப்புகளை அடுத்தக்கட்டத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளது. இந்திய அளவில் உயர்கல்வி படிப்போர் எண்ணிக்கை 24 சதவீதமாக உள்ளது.

இந்தியாவில் தமிழகத்தில் 49 சதவீதம் உயர்கல்வி படிப்போர் இருக்கின்றனர். இது 80 சதவீதமாக உயர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தினமலர் - 09.12.19

இந்து தமிழ் திசை

# நிலவை ஆய்வு செய்ய மீண்டும் லாண்டரை அனுப்ப வேண்டும்

## ● இஸ்ரோ முன்னாள் தலைவர் மயில்சாமி அண்ணாதுரை வலியுறுத்தல்

▪ விழுப்புரம்

நிலவை ஆய்வு செய்வதற்கு மீண்டும் லாண்டரை மட்டும் அனுப்ப விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இஸ்ரோ முன்னாள் தலைவர் மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார்.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க வந்த முன்னாள் தலைவரும், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் துணைத் தலைவருமான மயில்சாமி அண்ணாதுரை கூறியது:

ஆழ்துளைக் கிணற்றில் விழும் குழந்தைகளை காப்பற்ற தொழில்நுட்பத்தை கண்டறிய வேண்டும் என்பதற்காக தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளின் மாணவர்களுக்கு போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விரைவில் அதற்கான தொழில் நுட்பம் உருவாகும்.




▲ இஸ்ரோ முன்னாள் தலைவர் மயில்சாமி அண்ணாதுரை செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

சந்திராயன் திட்டத்தில் லாண்டர் விழுந்த இடத்தை கண்டுபிடித்த தமிழக இளைஞர் சண்முக சுப்பிரமணியன் பெயரையே அந்த இடத்திற்கு வைத்துள்ளனர். நாட்டில் பல்வேறு இடங்களிலும் அறிவியல் ஆர்வம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.

மனிதனை, விண்வெளிக்கு அனுப்பும் திட்டம் 2024-ம் ஆண்டுக்கு பிறகே சாத்தியமாகும். ஏனெனில், தற்போது சந்திராயன் திட்டத்தில் மீண்டும் லாண்டரை அனுப்பி ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. ஏற்கெனவே நாம் அனுப்பிய ஆர்ப்பிட்டர் சுற்றிக்கொண்டிருக்கிறது. இதனால் வெறும் லேண்டரை மட்டும் தயாரித்து அனுப்பினாலே போதுமானதாக இருக்கும். இதன் மூலம், அதற்கு செலவிடும் தொகையும் குறைவாக இருக்கும். விரைந்து அதனை செயல்படுத்த வேண்டும்.

### செயற்கை கோள் மீண்டும் அனுப்ப வேண்டும்

ஏற்கெனவே, செயற்கைக்கோள்கள் மூலமாக பல்வேறு தொழில் நுட்பங்களை பயன்படுத்தி வருகிறோம். அவைகளின் ஆயுள்காலம் முடிவதற்குள் அந்த பயன்பாட்டு செயற்கைக்கோள்களை மீண்டும் அனுப்ப வேண்டும். முன்பு இது போல, சரியாக பின்பற்றப்படாமல் விட்டதால் சில சேவைகள் பாதிக்கப்பட்டன. சரியாக அதனை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும். இதற்கு இஸ்ரோ ஆராய்ச்சி பணிகளில் மட்டும் அதிக கவனம் செலுத்தி, உற்பத்தி பணிகளை தனியாரிடம் ஒப்படைக்கலாம்.

### மீனவர்களுக்கு தொழில் நுட்பம்

இந்திய ஆராய்ச்சிதுறை அடுத்ததாக மீனவர்கள் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை கண்டறிந்து செயல்படுத்த உள்ளது. இதன் மூலம், கடலில் எந்த இடத்தில் மீன்கள் அன்றைய தினம் அதிகளவு இருக்கிறது என்பதை அறிய முடியும். நமது நாட்டின் எல்லையை கடலில் தாண்டும்போது, மீனவர்களை எச்சரிக்கும். புயல் மழை குறித்து தகவல் கடலில் இருக்கும் மீனவர்களுக்கு கிடைக்கும். அதே போன்று, வேளாண்துறையில், பயிர்களை ஒரு குறிப்பிட்ட இடத்தில் பூச்சி தாக்குதல் தொடங்கியது என்றால், அதனை ஆரம்பத்திலேயே கண்டறிய முடியும்.

தமிழகம் உயர்கல்வியில் 50 சதவீத்தை நெருங்கியுள்ளது. இது இந்திய அளவில் மிக அதிகம். அமெரிக்காவுடன் ஒப்பிட்டால் குறைவு. தமிழகத்தில் உயர் கல்வி பெறுபவர்கள், ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்து அதிகரிக்கப்பட்ட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்து தமிழ்
12-12-19

### ஆபத்து காலங்களில் உதவும்

# காவலன் ஆப்பை மக்கள் பயன்படுத்த வேண்டும்

## எஸ்பி ஜெயக்குமார் வேண்டுகோள்




**விழுப்புரம், டிச. 18:** விழுப்புரம் மாவட்ட காவல்துறை சார்பில், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் காவலன் ஆப் பயன்படுத்துவது குறித்து மாணவிகளிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. எஸ்பி ஜெயக்குமார் தலைமை தாங்கி பேசியதாவது: காவலன் ஆப் தமிழக காவல் துறை சார்பில் வடிவமைக்கப்பட்டு, தமிழக முதல்வரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களுக்கு பிரச்னை ஏற்படும்போது காவல்துறையை தொடர்பு கொள்ள 100 என்ற அவசர எண்ணுக்கு டயல் செய்வது தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. பொதுமக்கள், குறிப்பாக பெண்கள் கூகுள் ப்ளேஸ்டோரிலிருந்து, காவலன் ஆப் பதிவிறக்கம் செய்து கொண்டால், செயலியில் உள்ள எஸ்.ஓ.எஸ் பட்டனை அழுத்திய உடனேயே அழைப்பவரின் இருப்பிடம் ஜி.பி.எஸ் மூலம் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு சென்று, பயனாளிகளின் இருப்பிடத் தகவல் மற்றும் வரைபடமானது அழைத்தவர் பதிவு செய்துள்ள எண்களுக்கு தானாகவே பகிரப்படும்.

மேலும், மொபைல் கேமரா தானாகவே இணைக்கப்பட்டு 15 விநாடிகளில் ஒலி மற்றும் ஒளியுடன் கூடிய வீடியோ எடுக்கப்பட்டு, அதுவாகவே காவல் கட்டுப்பாட்டறைக்கு அனுப்பி விடும். உடனடியாக சம்பந்தப்பட்ட காவல் துறையினரின் உதவி பாதிப்புக்குள்ளாக்கப்படுபவரின் இருப்பிடம் அறிந்து செயல்பட வசதியாக அமைக்கப்பட்டுள்ளது. இச்செயலியில் பயனாளிகளின் வசதிக்கேற்ப ஆங்கிலம், தமிழ் என இரு மொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. செயலியை பதிவிறக்கம் செய்து பயனாளிகள் தங்கள் அலைபேசி எண்கள், பெயர் மாற்று அலைபேசி எண்களை பதிவு செய்வதுடன் முகவரி மற்றும் மின் அஞ்சல் முகவரியையும் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் இந்த செயலியை ஒருமுறை பதிவிறக்கம் செய்து கொண்டால், எப்போது வேண்டுமானாலும் ஆபத்து காலங்களில் அதை உபயோகம் செய்து கொள்ளலாம். பயனாளிகள் ஆபத்தில் உள்ள போது இந்த செயலியின் மூலம் 3 பேருக்கு குறுஞ்செய்தி தகவல் அனுப்பும் வசதியும் இடம் பெற்றுள்ளது. சமீப காலங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படுவது பரவலாக நடந்து வருகிறது. எனவே, காவலன் எஸ்.ஓ.எஸ் செயலியின் பயன்பாடு பெண்கள், மாணவிகளின் பாதுகாப்புக்கு நண்பனாக இருக்கும். இச்செயலியை பொதுமக்கள் மற்றும் பெண்கள், மாணவிகள் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இதில். கூடுதல் எஸ்பி சரவணக்குமார், டிஎஸ்பி சங்கர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தினகரன்
18.12.19



நிகழ்ச்சியில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜெயக்குமார் பேசியபோது எடுத்த படம்.

# ஆபத்து காலங்களில் 'காவலன் செயலி' நண்பனாக உதவும்

## கல்லூரி மாணவிகளுக்கு போலீஸ் சூப்பிரண்டு ஜெயக்குமார் அறிவுரை

விழுப்புரம், டிச.18-

ஆபத்து காலங்களில் 'காவலன் செயலி' நண்பனாக உதவும் என்று கல்லூரி மாணவிகளுக்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜெயக்குமார் அறிவுரை கூறினார்.

### விழிப்புணர்வு நிகழ்ச்சி

விழுப்புரம் மாவட்ட காவல்துறை சார்பில் நேற்று மாலை விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 'காவலன் செயலி'யை பயன்படுத்துவது குறித்து மாணவிகளிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜெயக்குமார் தலைமை தாங்கி பேசியதாவது:-

தமிழக காவல்துறை சார்பில் 'காவலன் செயலி' வடிவமைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்படும்போது காவல்துறையை தொடர்பு கொள்ள 100 என்ற அவசர எண்ணுக்கு டயல் செய்வது தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

### 'காவலன் செயலி'

பொதுமக்கள், குறிப்பாக பெண்கள் தங்களது ஆண்ட்ராய்டு செல்போனில் கூகுள் பிளே ஸ்டோரில் இருந்து காவலன் செயலியை பதிவிறக்கம் செய்து கொண்டால் அந்த செயலியில் உள்ள எஸ்.ஓ.எஸ் பட்டனை அழுத்திய உடனேயே அழைப்பவரின் இருப்பிடம் ஜி.பி.எஸ். கருவி மூலம் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு சென்று பயனாளிகளின் இருப்பிடத் தகவல் மற்றும் வரைபடமானது அழைத்தவர் பதிவு செய்துள்ள எண்களுக்கு தானாகவே பகிரப்படும்.

மேலும் செல்போன் கேமரா தானாகவே இணைக்கப்பட்டு 15 விநாடிகளில் ஒலி மற்றும் ஒளியுடன் கூடிய வீடியோ எடுக்கப்பட்டு அதுவாகவே காவல் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பிவிடும். அதன்பேரில் உடனடியாக சம்பந்தப்பட்ட போலீசாரின் உதவி, பாதிப்புக்கு உள்ளாக்கப்படுபவரின் இருப்பிடம் அறிந்து செயல்பட வசதியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த செயலியில் பயனாளிகளின் வசதிக்கேற்ப ஆங்கிலம், தமிழ் என இரு மொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. செயலியை பதிவிறக்கம் செய்து பயனாளிகள் தங்கள் செல்போன் எண்கள், பெயர், மாற்று செல்போன் எண்களை பதிவு செய்வதுடன் முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் பதிவு செய்து கொள்ளலாம்.

### ஆபத்து காலங்களில் நண்பனாக

மேலும் இந்த செயலியை ஒருமுறை பதிவிறக்கம் செய்து கொண்டால் எப்போது வேண்டுமானாலும் ஆபத்து காலங்களில் அதை உபயோகம் செய்து கொள்ளலாம். பயனாளிகள் ஆபத்தில் உள்ள போது இந்த செயலியின் மூலம் 3 பேருக்கு குறுஞ்செய்தி தகவல் அனுப்பும் வசதியும் இடம் பெற்றுள்ளது. சமீப காலங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படுவது பரவலாக நடந்து வருகிறது. எனவே காவலன் எஸ்.ஓ.எஸ். செயலியின் பயன்பாடு பெண்கள், மாணவிகளின் பாதுகாப்புக்கு நண்பனாக இருக்கும். இந்த செயலியை பொதுமக்கள் மற்றும் பெண்கள், மாணவிகள் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு சரவணக்குமார், துணை போலீஸ் சூப்பிரண்டு சங்கர், இன்ஸ்பெக்டர் கனகேசன், தெய்வானை அம்மாள் கல்லூரி பதிவாளர் சவுந்தர்ராஜன், துணை முதல்வர் செல்வி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

தினகரன்
18.12.19